KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931௵ ஜூன் ௴ 25௳ [No. 25

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 481
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 483
3. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம்-11—17)
K. இராமரத்நம் ஐயர் B.A. 484
4. நவராத்திரி — ஓர் நாடகம்
K. N. சுந்தரேசன் B. A. (Hons) 486
5. யாப்பிலக்கணம் (தொடை-விகற்பங்கள்.) 488
6. மானதசாத்திரம் (புலன்கள் - இடவுணர்வு)
T. P. மீனாக்ஷிசுந்தரம் M.A. B.L. 490
7. ஓர் இரவின் வருணனை—(Oliven Goldsmith)
K. இராஜகோபாலன் 493
8. கம்பராமாயணம் (நகர்நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 495
9. அட்டவணை. 497

கலாநிலயம்

உருவத் திரை

2.

ஒற்றுமையையும் வேற்றுமையையும் உடனுக்குடன் காட்டி அவையிரண்டிற்குமிடையே பொதுவுற அமைந்தவோர் நட்பையும் தன் மாற்றுத்தோற்றத்தால் புலப்படுத்துதற்கேற்ற ஆற்றலுடையவைகளெல்லாம் கலைப்பொருள்களாகும், என்று சென்றநாள் கூறினோம். அப் பொதுத்தன்மை பிறப்பதோடு பிறக்கலாகின்றது பேரின்பம். இந்தச் சக்தி இயற்கைப் பொருள்களிடத்தே எய்திருப்பதால் அவை அனைத்தும் கடவுளின் கலைப்பொருள்கள் என்னும்படி நிற்கின்றன. மிகநெருங்கி இவைகளோடு பயின்றாலன்றி அக் கலைத்திறம் நம்பாற் செல்வதில்லை. இவ்வண்ணம் நெருங்கிப் பயின்றவர்க்கு இயற்கைப்பொருள்கள் தம்மைத் தெரிவித்துக் கொள்ளுமோர் அரிய இரகசியத்தை ஷேக்ஸ்பியர் மகாகவி, "விரும்பி நீ வேண்டுமாறே" என்னுந் தன் நாடகத்துள் இனிது விளங்க வைத்திருக்கின்றனர்.

ஓர் சிற்றரசன், தன் தம்பியின் வஞ்சனையால் அரசிழந்து அடவியில் வாழும் நாட்களில் ஒரு நாள், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்போல் ஒட்டி உலரும் உறவினராய்த் தன்னோடு வைகிய பிரபுக்களை நோக்கிப் பின் வருமாறு பேசுகின்றான்:—

Duke:—"And this our life, exempt from public haunt,
Finds tongues in trees, books in the running
brooks,
Sermons in stones, and good in everything.
I would not change it.

Amiens:—Happy is your grace
That can translate the stubborness of fortune
into so quiet and so sweet a style.

Duke:—Come, shall we go and kill us venison?
And yet it irks me, the poor dappled fools,
Being native burghers of this desert city,
with forked heads
Have their round haunches gor'd.

1st Lord:— Indeed, my lord,
The melancholy Jaques grieves at that;
And, in that kind, swears you do more usurp
Than doth your brother that hath banished you.

[சிற்றரசன்:-பொதுஜன நடமாட்டத்தில் ஊடாடா இந்த நம்வாழ்க்கையோ, தாவரங்களில் நாவுகளையும், பாயும் ஓடையிற் புனித நூல்களும், பாறைக் கற்களில் தத்துவ உரைகளும்,—எல்லாவற்றிலும் நல்லதே காண்கின்றது. இதனை நான் மாற்றமாட்டேன்.

ஒரு பிரபு:—விதியின் வன்மையை இத்துணை அமைதியும் இனிமையும் வாய்ந்த நடையில் மொழிபெயர்த்தியம்ப வல்ல பெரும, நின் பாக்கியம் பெரிது.

சிற்றரசன்:—மான்வேட்டையாடிப் புசிக்கலாம் வாருங்கள். எனினும், மனிதரற்ற இவ்வனத்தில் உரிமையுடன்

வாழ்கின்ற அப்புள்ளித்தோல் ஏழைப் பேதைகளை, அவைகளின் எல்லையினுள்ளேயே, நம் கவர்கணைகளால் திமில் துளைப்பதோ வென எனதுள்ளம் துன்புற் றுளைகின்றது.

மற்றோர் பிரபு:—ஆம், ஐய! வியாகுலச் சிந்தையன் ஜாக்ஸ் (என்பவனும்) இது கருதி வருந்துகின்றான். இவ்வகையில், உன்னைக்காடுதுரத்திய நின் தம்பியிலும் அதிகக் கொடுமையாய்க் கவர்ந்து நீ கைப்பற்றுகின்றாய் எனக் கழறுகின்றா னவன்]

நமக்கு வேண்டியவரையில் இங்கு எடுத்துக்கொண்டோம். வனத்திடை நெடுங்காலம் வாழ்ந்திருந்த செவ்வியில், அண்மிப்பழகிய தருக்களும் ஓடைகளும் கற்களும் வேறுவேறாய தம் உருவங்களை மெள்ள மெள்ளக் களைந்தகற்றித் தம் வடிவினை அவ்வரசனுக்குத் தெரியக்காட்டின. உருவம் வேறாயினும் வடிவமோ ஒன்றே. அதனை, மரங்கள் தம் நாவினால் நவின்றன. நவின்றவைகளை வரைந்துவைத்த நூலின் ஏடுகளாய் அவ்வோடைகள் தோன்றின. அந்நூலின் மெய்ப்பொருள் விரித்தியைக் கல்லிற்கண்டான். அவ்வடிவின் நுட்பந்தான் யாதெனில், "எல்லாம் நல்லதே" என்பதாம். மரமென்றும் நீரென்றும் கல்லென்றும் நின்ற அவை அவன்மனத்தைத் தாக்கியதும், பண்பட்ட அவன் மனத்தினின்றுங் கலையுணர்வு பொங்கிப்போய் அவைகளைக் கதுவிக்கொள்ளுதலும், அவை 'நன்மை' என்னும் ஒற்றுமையைப் பொதுவுற எய்தி அவனுக்குத் தம்மை மற்றோர்விதத்தில் மாற்றித் தோற்றுவித்துக்கொண்டன. இக்காட்சியை இவன் கண்ட புதுமையின் பயனும் உடனே தோன்றுகின்றது. நன்மையை அண்மியவர்க்கு அறிகுறி அன்பல்லாது வேறு யாதுளது. சுரந்த அன்பினால் இவன் புதுப்பிறவி எடுத்தவனாயினான். ஆயதாற்றான், பண்டைப் பிறவியின் வாசனையால் மான்வேட்டைக்கு எழுந்த அவன் உள்ளத்தை இப் புதுப் பிறவியின் தூய்மை புகுந்து தகைகின்றது. இவனுடன் வந்திருந்த ஜாக்ஸ் என்பவனுக்கு, அரசவேட்டையிலும் மான்வேட்டை அதிகம் கொடியதாய்க் காணப்பட்டது இயற்கையே. இதுவேதான் ஷேக்ஸ்பியரின் உள்ளக்கருத்தென்று நாம் கொள்ளல் வேண்டும்.

இசைவாணன், கவிவாணன், சிற்பி, ஓவியன், இன்னோர் தத்தம் கலைகளிற் றலைசிறந்து விளங்குங்கால் தாம் இயற்றும் கலைப்பொருள்களில் தம்மையே தெரிவித்துக்கொள்கின்றனர். பாடகன் பாட்டிலும் புலவன் பாசுரத்திலும், சிற்பியின் சிலையிலும், சித்திரப்படத்திலும் பொலிகின்ற சொல்லும் பொருளும் உருவமும் யாவதாயினும் ஆகுக; அவ்வக் கலைஞனை முறையே ஒவ்வோர் சுரத்திலும் சீரிலும் உறுப்பிலும் நிறத்தினும் காணலாம். எண்ணில் பல்கோடி மாந்தருக்கும் குரல்வேற்றுமை யிருப்பதேபோல், அவரவர் கலைப்பொருள், இது இன்னது என்னுந் தன்மையில் பொதுமைப்படலாமாயினும், ஒவ்வொருவன் கலையில் வளர்ந்த பொருள்களுக்கெல்லாம் ஒரு தனிக் குரல் (Tone) உளது. தெரிந்தவர் குரலைக்கொண்டு அவரை அறிந்துகொள்ள இயல்வதேபோல் கலைப் பொருள்களைக்கொண்டு அதனை இயற்றிய கலைஞன் யாவனெனத் தெரிந்துகொள்ளலாம். கலைஞன் தானே தன் கலைப்பொருளாய்ப் பரவுகின்றனன். கடவுளின் கலைப்பொருளே இப்படைப்பு என்றுரைப்பதற் கேற்ப படைப்புப் பொருளனைத்தும் அக்கடவுளே என்று கூறும் ஒருசார்க் கொள்கையினர் கருத்தும் விளங்கப் பெறுகின்றது. இதன்படி நோக்குங்கால், "கண்டனவெலாம் மோன உருவெளியதாகவுங் கருதி அஞ்சலி செய்வாம்" என்ற தாயுமானவர் வாக்கின் மெய்ப்பொருளைக் காணல் அரியதாகாது. காதல்சான்றவர் காணும் உருவெளிக்கும், இவர் கருதித் தொழுவிழையும் உருவெளிக்குமிடையே நுண்ணியதோர் வேற்றுமையுளது. அவர், காதலாரின் உருவத்தை வெளித்தோன்றக் காண்பவர்; இவர், தாம் காணும் பொருள்களின் உருக்களினின்று வெளித்தோன்றும் அக் கடவுட் காட்சியைக் காணப்பெற்று அஞ்சலி செய்யவேண்டுபவராகின்றார். 'வளையெலி கண்டேன்' என்னுங்கால், வளையிலிருந்து வந்த எலியைக் கண்டேன் என ஐந்தாம் வேற்றுமைத் தொகையாவதுபோல் 'உருவெளித் தோற்றம்' என்பதும் இப்பொருளை ஏற்பதுஇயலும்.

எல்லாந் தானேயாய் இயங்குகின்ற தத்துவத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவான் கீதையில் விளம்பியிருக்கின்ற உண்மை நம்மில் அனைவருக்குந் தெரிந்திருக்கலாம். ஆனால், கிறிஸ்தவர் வேதத்திலும் இத்தத்துவத்தோடு ஒப்புக்கூறவல்ல வாசகங்கள் சில உள. உதாரணமாக, இயேசுகிறிஸ்து நாதர், நியாயத்தீர்ப்பு நாளில் நிகழப்பெறும் முறையை முன்னறிவிக்கும்போது பின்வருமாறு விளம்புகின்றார்.

Then shall the king say unto them on his right hand, come, ye blessed of my Father, inherit the kingdom prepared for you from the foundation of the world :

For I was hungred, and you gave me meat : I was thirsty, and you gave me drink; I was a stranger, and ye took me in :

Naked, and ye clothed me: I was sick, and ye visited me: I was in prison, and ye came unto me.

Then shall the righteous answer him, saying, Lord, when saw we thee hungred, and fed *thee*? or thirsty, and gave *thee* drink?

When saw we thee a stranger, and took *thee* in? or naked, and clothed *thee*?

Or when saw we thee sick, or in prison, and came unto thee?

And the king shall answer and say unto them, Verily I say unto you, in as much as ye have done *it* unto one of the least of these my brethen, ye have done *it* unto me.

ஒரு மனிதன் வேறோர் மனிதனை ஆதரித்துச் செய்கின்ற உபகாரங்களனைத்தும்இறைவனையே ஆராதித்தபடி ஆகும் என்று கிறிஸ்துநாதர் விளம்புகின்ற இவ்வுண்மையை, கலைகளின் பயிற்சியால் உருவத்திரைகளை அகற்றிப் படைப்பின் மெய்வடிவைக் காணவல்ல மாண்புடையோர் யாவரும் தம் உணர்வின் நுண்மையால் தேர்ந்துகொள்வர். ஆதலாற்றான் காவியங்களனைய கலைகளைக் கற்றனுபவிக்கவல்ல செம்மையை எல்லாரும் எய்தவேண்டுமென்பது இன்றியமையாததென இக் 'கலாநிலயம்' இடைவிடாது இயம்பலாகி வருவதுடன், அவ்வாறு கற்கவிரும்புவோர்க்குக் காவியங்களைத் தக்கமுறையில் அறிமுகம் செய்துவைப்பதொன்றையே தன்னினிய கடமையாகவும் பூண்டிருக்கின்றது.

தெருண்ட மேலவர், உருவமே மெய்ம்மையென்று மயங்காமல், இந்நிலைப்பொருள்களின் உயிர்நிலையுள் ஊடாடிய வாழ்க்கையைக்கொண்டு மாண்புறத் திகழ்வார். உயிர்நிலை என்பது, வள்ளுவர் வாக்கின்படி, அன்பு; அதுவே அறமும்—அதனால் வருவதே இன்பம். மற்றெல்லாம் புறத்த, புகழுமில.

அப்பர்

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

24. யோகம்

[465-வது பக்கத் தொடர்ச்சி]

9. ஹடயோகம்

இது சுயேச்சையுடன் சுதந்தரத்தில் இருக்கின்ற * யோகத்தின் பலனாகும். யோகாப்பியாசம் ஒன்றும் இன்றியே தேக வியாதியாலும், இவ்வகைத் தத்துவசம்பந்தம் ஏற்பட்டு, உடம்பு ஆகாயத்தி லெழுப்பப்பட்டு, மறுபடியும் பூமிக்கு வருவதைப் பற்பல இடங்களில் நோகப் பல்லோர் தாமே கண்டிருக்கின்றனர். இவ்வகையான வியாதிகள் பெரும்பாலும் மாதர்களையே பீடிக்கும். வியாதியென்று அறியாது இதைப் பேய் என்றும் பிசாசென்றும் பிரமராக்கதன் தூக்குகிறதென்றும் பாமரசனங்கள் மொழிவர். பேய் பிசாசுகளுக்குக் காற்று என்று ஒரு பெயருமுண்டாதலால், காற்றால் நடக்கும் சேட்டையைக் காற்றின் சேட்டையென்பது பெருங்குற்றமுமன்று. இது நிற்க,

காற்றானது † பிராணாயாமத்தால் நல்ல முறைப்படி உள்ளே கொள்ளப்படுமாயின் உடல் ஒருவழியும் உயிர் ஒருவழியுமாய், நமது தேக இலக்கணம்போ லிராமல் உடலும் உயிரும், அதாவது பிராணவாயுவும் குண்டலியும், கலந்து உழைக்குங்காலையில் அந்தத் தன்மைபெற்ற யோகியர்கள் பெரும்பாலும் கல்வியறிவில் முதிர்ந்தோராதலால் சிவபெருமான் திருவடிப்பேற்றை, இவ்வுடலழியாது சீவன்முத்தராய்ப் பெற்றுக் களிப்பதும் உண்டு. இத்தகைய திருவிளையாடலை நினைந்தோ, திருநாவுக்கரசும்,

உடலு முயிரு மொருவழிச் செல்லு முலகத்துள்ளே
அடையு முனைவந் தடைந்தார் அமர ரடியிணைக்கீழ்
நடையும் விழவொடு நாடொறு மல்குங் கழுமலத்துள்
விடையன் றனிப்பாத நாடொறுநந்தம்மையாள்வனவே

திருக்கழுமலம் - திருவிருத்தம் - 8.

பிராணவாயு பூரகத்தில் குண்டலிசக்தியோடு சம்பந்தப்படப் பழகிய யோகியானவன் சிலகாலம் அவ்வாறு பழகி வாயுமண்டலம் வரையில், பறவைகளைப் போல் உலாவுவதும் பின்னர் உலகத்திலிருப்பதுமாய்க் காலங்கழிப்பான். இவன் தேகத்திலுள்ள குண்டலி சக்தியானது பிரமநாடி யிலோடிக் * கபாலத்திற் செல்லும். பிரமநாடிக்குச் சுழிமுனை யென்றொரு பெயருண்டு. இது முதுகுமூளை ஆரம்பத்தில் உள்ள மூளையாகும். நூலுருண்டைபோல் இது ஆக்கப்பட்டிருப்பதைக்காணலாம். புகையந்திரங்கள் முகந்திருப்பும் கருவி (Turntable) போல் இது தேக ஆட்சிச் சக்தியைத் திருப்பும் தொழில் பூண்டது. அதன் வழியே குண்டலிசக்தியைக் கபாலத்திற்செலுத்தி, கபாலத்தின் அடிவாரத்தினின்று பன்னிரண்டு விரற்கடை செல்லுமாகின் சித்ததரிசன சித்தி இரேசகத்தால் எளிதின் கிடைக்கும். இதை ஞானவாசிஷ்ட ஆசிரியர் மிகவும் இனிய நடையில் விளக்குவது காண்க:—

நாடிகளெல் லாந்தகையும் இரேசகத்தால் ஒரு
  நண்ணி நிற்கில் [முகூர்த்தம்
நீடியவிண் சரிப்பவரைக் காணலாம்; விஞ்ஞான
  நேர்மை யாலே
ஊடுறதூ ரத்தோடும் ‡புந்திவிழி யால் விண்ணில்
  ஊன்றத் தோன்றும்
பீடுறுநற் பொருளுதவும் சித்தர்கணம் கனவிலே
  பிறங்கு மாபோல்
பன்னிரண்டங் குலத்தின் முகத்தின் புறம்போ
  யிரேசகத்தின் பழக்கத் தாலே
மன்னுயிர்தான் நெடிதுநிலை நிற்குமேல்
  வேற்றுடலை மருவும்...‡

சிகித்துவசன்கதை 56 & 57.

எனவே ஹடயோகத்தில் பிராணாயாமத்தின் பாகங்களான பூரக இரேசகங்களைக் குண்டலிசக்தியோடு மேற்கண்ட நிலையில் ஒருவன் கலக்கவைப்பானாயின் அஷ்டமா சித்திகளையும் அவன் அடைவானென்பது யோகநூற் பிரமாணமாம். அஷ்டமா சித்திகளின் இலக்கணங்கள் சிலவற்றை அப்பர் நினைத்துச் சிவபெருமானை நோக்கிப் பாடுவது காண்க.

நோக்காதே யெவ்வளவு நோக்கி னானை
  நணுகாதே யாதொன்று நணுகி னானை
ஆக்காதே யாதொன்று மாக்கி னானை
  யணுகாதா ரவர்தம்மை யணுகா தானைத்
தேக்காதே தென்கடனஞ் சுண்டான் றன்னைத்
  திருப்புன்கூர் மேவிய சிவலோகனை
நீக்காத பேரொளிசேர் நீடு ¶ ரானை
  நீதனே னென்னேநா னினையா வாறே.

திருப்புன்கூர் திருநீர்-திருத்தாண்டகம் 5.

அஷ்டமா சித்திகளைச் சிவயோகத்தால் பெற்ற சித்தர்களுக்குத் தன்வினை யென்பது அறவே யொழியும். இஃதன்றி வேறு மார்க்கத்தில் சித்தனாவ

---

* கருவுற் றிருந்துன் கழலே நினைந்தேன் கரும்புவில்
தேருவிற் புகுந்தேன் திகைத் தடியேனைத் திகைப்பொழிவி
உருவிற் றிகழ முமையாள் கணவா விடிற்கெடுவேன்
திருவிற்பொலி சத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சத்திமுற்றம் - திருவிருத்தம் 5.

† தமக்கு நல்லது தம்முயிர் போயினு
விமைக்கும் போது மிராதிக் குரம்பைதான்
உமைக்கு நல்லவ னுறை யும்பதி
நமக்கு நல்லது நல்ல மடைவதே.

திருநல்லம் - திருக்குறுந்தொகை - 4.

* வானஞ் சாடு மதியர வத்தொடு
தானஞ் சாதுடன் வைத்த சடையிடைத்
தேனஞ் சாடிய தெங்கிள நீரொடும்
ஆனஞ் சாடி வாமாத்தூ ரையனே.

திருஆமாத்தூர் - திருக்குறுந்தொகை 10.

‡ ஊடுறதூரத்தோடு=ஊடுறு †அதூரத்தோடு, எனச் சந்தி பிரிப்பர் அருணசல சுவாமிகள்.

¶ பரகாயப்பிரவேசம்.

னும் சிறிது சிவபக்தியால் * எளிதில் முத்திபெறலாமென்பதும் திண்ணம். இவ்வரிய விஷயங்களை இரட்டுற மொழியும் நடையில் நாம் மயங்குமாறு அப்பர் ஆங்காங்குப் பாடுவதைக் கவனிப்போமாயின், பற்பல வகையான யோகமார்க்கங்களும், அவற்றின் சாதனங்களும், பயன்களும், திருநாவுக்கரசு உணர்ந்தாரென்பது விளங்கும். போகமுறையிற் செய்யப்படும் சிவத்தியானமே தியானமாகும் †. அதுவே பழுதின்றித் தொழுதலும் ‡ நெருக்கியூன்ற நினைத்தலுமாம். அவ்வாறு செய்யின் பெம்மான் "ஆர்கிலா வமுதாய்"க் காணப்படுவ ரென்பது அப்பர் கொள்கையாம்:-

விழுது சூலத்தன் வெண்மழு வாட்படைக்
கழுது துஞ்சிருள் காட்டகத் தாடலால்
பழுதொன் றின்றிப்பைஞ் ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே.

காரு மாமலர்க் கொன்றையந் தாரினர்
வாரு லாமுலை மங்கையோர் பங்கினன்
தேரு லாம்பொழில் சூழ்ந்தபைஞ் ஞீலியெம்
ஆர்கி லாவமு தையடைந் துய்ம்மினே.

தருக்குச் சென்று தடவரைப் பற்றலும்
நெருக்கி யூன்ற நினைந்து சிவனையே
யரக்கன் பாட வருளுமெம் மானிடம்
இருக்கை ஞீலியென் பார்க்கிட ரில்லையே.

திருப்பைஞ்ஞீலி-திருக்குறுந்தொகை. 3, 9, 10

* மத்த மாமலர் சூடிய மைந்தனர்
சித்த ராய்த்திரி வார்வினை தீர்ப்பரால்
பத்தர் தாந்தொழு தேத்துபைஞ் ஞீலியெம்
அத்த னைத்தொழ வல்லவர் நல்லரே.

திருப்பைஞ்ஞீலி - திருக்குறுந்தொகை

† வெம்மை யான வினைக்கடல் நீங்கிநீர்
செம்மை யான சிவகதி சேரலாம்
சும்மை யார்மலர் தூவித் தொழுமினே
நம்மை யாளுடை யானிட நல்லமே.

திருநல்லம் - திருக்குறுந்தொகை 8.

‡ கால மான கழிவதன் முன்னமே
யேலு மாறு வணங்கிநின் றேத்துமின்
மாலு மாமல ரானொடு மாமறை
நாலும் வல்லவர் கோனிட நல்லமே.

திருநல்லம்-திருக்குறுந்தொகை 9

‡ உருவமு முயிரு மாகி யோதிய வுலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்றன்னை
அருவிபொன் சொரியு மண்ணு மலையுளா யண்டர்
மருவிநின் பாதமல்லான் மற்றேநமாடி லேனே[கோவே

திருவண்ணுமலை-திருநேரிசை 3

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[470-வது பக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

248. ஊழ்வர வென்ன தேனும்
ஒருவகைக் கரும மெல்லாம்
சூழ்பவர் சூழ்ந்து சூழுஞ்
சூழ்ச்சியுட் டோன்று மன்றே
யாழ்பகர்ந் தனைய தீஞ்சொ
லமிர்தின ரேனுஞ் சூழ்ச்சி
வாழ்பவர் வல்ல ராயின்
மன்னராய் மலர்ப வன்றே. 11.

ஊழ்வரவு - ஊழ்வினையால் வரக்கூடியவை, என்னது ஏனும் -எதுவாக இருந்தபோதிலும், ஒருவகை- ஒருவாறு, சூழ்பவர் சூழ்ந்து சூழும் சூழ்ச்சியுள் - மந்திரிகள் தன்னைச் சுற்றியிருந்து ஆலோசிக்கும் ஆலோசனையில், தோன்றும் - முன்னரே தோன்றும். யாழ் பகர்ந்த அனைய - யாழ் இசைத்தாலன்ன, தீம் சொல் அமிர்தினர் - இனிய சொல்லாகிய அமிர்தத்தையுடைய பெண்பாலாராயினும், சூழ்ச்சி வாழ்பவர்- மந்திராலோசனைத் தொழிலினராகியவர், வல்லர் ஆயின் - அமைச்சுத் தொழிலில் வல்லவராயிருந்து தமக்கு உதவிபுரிந்து நிற்பாராயின், மன்னராய் மலர்ப - நல்ல மன்னராய்ப் புகழ்பெற்று விளங்குவார்.

அரசாள்பவர் பெண்பாலாராயினும் மந்திரிகள் சமர்த்தராயிருப்பின் அவர்களின் உதவியைக்கொண்டு அரசை இனிது நடத்தித் தாம் புகழ்பெற்று விளங்குவார்கள், என்பது பின்னிரண்டடிகளின் கருத்து. ஊழ் - (ஆகுபெயர்.) ஊழ்வினையின் பயன். 'யாழ்... அமிர்தினர்' என்றமையால் பெண்பாலார் என்றுரைத்தாம்.

'யாழ்பகர்ந் தினிய தீஞ்சொ லமிர்தனர்' என்பது பாடாந்தரம். மலர்ப - பகரவீற்றுப் பலர்பால் வினைமுற்று.

---

249. ஆற்றலென் றோதப் பட்ட
அரசர்கட் கவற்றின் மிக்க
ஆற்றருன் சூழ்ச்சி யென்ப
தாதலா லதனை யாயும்
ஆற்றலா ரமைச்ச ராக
அமைச்சரோ டமர்ந்து செல்லும்
ஆற்றலா னரச னாகின்
அரியதொன் றில்லை யன்றே. 12.

அரசர்கட்கு - அரசர்களுக்கு, ஆற்றல் என்று - வலிமையைத் தரத்தக்கனவென்று,ஓதப்பட்ட அவற்றின் - (நூல்களில்) சொல்லப்பட்ட நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் அவ்வைந்து உறுப்பினும், மிக்க ஆற்றல்தான்- அதிமான வலிமையாவது, சூழ்ச்சி என்பது - மந்திராலோசனை என்று சொல்லப்படும் அதுவேஆகும். ஆதலால்-ஆகையால், அதனை ஆயும் ஆற்றலார் - அவ்வாலோசனையை (நன்றாய்) ஆராய்ந்து செய்ய வல்லவரே, அமைச்சர் ஆக - தனக்கு மந்திரிகளாக அமையப்பெற்று, அமைச்சரோடு - அவருடன், அமர்ந்து செல்லும் ஆற்றலான்- விரும்பிப் பொருந்தியிருந்து எக்காரியத்தையும் நடத்த வல்லவனை, அரசன் ஆகின் - அரசன் இருப்பானயின், அரியது ஒன்றும் இல்லை - அவனுக்கு முடித்தற்கு அரிய காரியமென்று எதுவும் இராது.

---

250. வடந்திகழ் முலையி னர்தங்
காமத்தின் மதர்த்த மன்னர்க்
கடைந்தவா மாண்பு மாங்கொன்
றில்லையவ் வரசர் வாழ்க்கை
கடந்தவழ் கடாத்த வேழங்
களித்தபின் கல்வி மாணு
மடந்தவ னொருவன் மேற்கொண்
டன்னதோர் வகையிற் றாமே. 13.

வடம்திகழ் முலையினர்தம் - முத்து வடங்கள் அழகுபெற்று விளங்குவதற்குக் காரணமான முலைகளையுடைய பெண்களின், காமத்தின் - காமத்தினால், மதர்த்த-களித்து மயங்கிய, மன்னர்க்கு - அரசருக்கு, அடைந்த ஆம் மாண்பும்-உண்டாகக்கூடிய பெருமை, ஒன்றும்இல்லை-ஒரு சிறிதும்இல்லை. அரசர் வாழ்க்கை-அத்தகைய அரசர்களின் வாழ்வு,கடம் தவழ்கடாத்த வேழம் - கன்னத்திலிருந்து ஒழுகுகின்ற மதநீரையுடைய யானை, களித்தபின் - மதங்கொண்டபின், கல்விமாணு மடம் தவழ் ஒருவன்-யானையை அடக்கி நடத்தும் பயிற்சியில்லாத ஒருவன், மேல்கொண்டு அன்னது ஒரு வகையிற்று ஆம் - அதன்மேலேறிச் செல்வது போன்றதொரு தன்மையதாகும். (கெட்டழிவதற்குக் காரணம் ஆகும்.)

வடம் - மாலை, ஆரம். கடம் - கன்னம்; the cheek. கடாம் - மதநீர். மடம் - அறியாமை.

---

251. சுந்தரச் சுரும்புண் கண்ணிச்
சூழ்கழ லரசர் வாழ்க்கை
தந்திர மறிந்து சூழ்வான்
சூழ்ச்சிய தமையல் வேண்டும்
மந்திரம் வழுவு மாயில்
வாளெயிற் றரவு காய்ந்து
தந்திரந் தப்பி னாற்போற்
றன்னையே தபுக்கும் அன்றே. 14.

சுந்தரம் சுரும்பு உண் கண்ணி-அழகான வண்டுகள் தேனையுண்ணும் மலர்க்கண்ணியையும், சூழ் கழல் - (காலில்) கட்டிய வீரக்கழலையும் உடைய, அரசர் வாழ்க்கை - அரசர்களின் நல்வாழ்வு, தந்திரம்அறிந்து சூழ்வான் - எல்லா உபாயங்களையும் ஆலோசித்து அறியும் மந்திரியினுடைய, சூழ்ச்சி அது அமையல் வேண்டும் - நல்லாலோசனையோடு பொருந்தி இருத்தல் வேண்டும். மந்திரம் வழுவும் ஆயில் - பாம்பைக் கட்டும் மந்திரம் தவறினால், வாள் எயிறு அரவு - கொடிய விஷப்பற்களையுடைய பாம்பு, காய்ந்து - சினந்து, தன்னையே தபுக்கும் - மாந்திரிகனையே கொன்றுவிடும். போல் - அதுபோல, தந்திரம் தப்பினால்-மந்திரிகளின் சூழ்ச்சி தவறினால்,தன்னையே தபுக்கும்-பகையாளர் தம்மை நாசஞ்செய்துவிடுவார்கள். அன்று ஏ - அசை.

---

252. எடுத்தன னிலங்கு சாதி
எழிலொடு திகழு மேனும்
அடுத்தன நிறத்த னாகும்
அணிகிளர் பளிங்கு போல
வடுத்தவ மலர்ந்து நுண்ணூல்
மதியவர் வினையின் மாட்சி
கொடுத்தவா நிலைமை மன்னர்
குணங்களாக் கொள்ப வன்றே. 15.

எடுத்தனன் இலங்கு சாதி-அவ்வப்பொழுதுளவன் தன்னை அடுத்துத் தனக்கு வேண்டியவன்போல நடக்கின்றானோ அவன் வசமாய் ஒழுகும் மன்னன், எழிலொடு திகழுமேனும்-எல்லாவுறுப்புக்களும் அழகுற அமைந்திருந்தாலும், அணிகிளர் பளிங்குபோல-அழகிய பளிங்கைப்போல,அடுத்தன நிறத்தன் ஆகும்-(தனக்கென்று நிலைத்த குணம் ஒன்றுமின்றி) தனது பக்கத்திலுள்ளவனுடைய குணம் செயல்களுக்கு ஒத்த குணச் செயலினனாய் மாறிவிடுவான். அவ்வாறன்றி, நிலைமை மன்னர் - ஒரே நிலையில் நிற்கும் திடபுத்தியினராகிய மன்னர், வடுத்தவ மலர்ந்து நுண் - குற்றமற விரிந்து நுண்ணிதாகிய, நூல்மதிஅவர் - நூல்களைக் கற்றறிந்த மதியினராகிய அமைச்சர்,வினையின் மாட்சி கொடுத்தவா - நன்மைபயக்கும் வினையென்று தமக்கு உரைத்தவாறு கடைப்பிடித் தொழுகலே, குணங்களாக் கொள்ப - மேன்மையான செயலாக மதிப்பார்கள்.

சாதி - இனம்; அரசரினத்தைச் சேர்ந்தவனாயினும் அவன் அரசன் அல்லன் என்பது தோன்றச் 'சாதி' என்றார். எழில் - தனது மெய்யுறுப்பி னெழிலும், அரசியலின் அங்கமாகிய படை அரண் முதலிய உறுப்பினெழிலும். 'மலர்ந்து' என்னும் வினையெச்சம் 'நுண்' என்னும் பெயரெச்சத்தைக்கொண்டுமுடிந்தது. வினைகளின் பன்மைநோக்கிக் 'குணங்களா' என்றார். கொடுத்தவா - கொடுத்தவாறு.

---

253. மன்னுநீர் வளாக மெல்லாம்
வணக்குதல் வல்லீ ராய
பன்னுநூற் புலவீர் முன்னர்ப்
பலபகர்ந் துரைப்ப தென்னை
என்னைநீ ரிறைவ னாக்கி
யிராப்பக லியற்ற வன்றோ
இன்னநீ ரின்ப வெள்ள
மியைந்தியா னுயர்ந்த தென்றான். 16

மன்னு நீர் - கடலாற் சூழப்பட்ட, வளாகம் எல்லாம் - இவ் வுலகை முழுவதையும், வணக்குதல் - என்னை வணங்கும்படி செய்தல், வல்லீர்ஆய - வல்லவராகிய, பன்னும் நூல் புலவீர் முன்னர் - ஓதற்குரிய நூல்களையெல்லாம் ஓதியுணர்ந்த அறிஞராகிய உங்கள் முன்னிலையில், பல பகர்ந்து உரைப்பது என்னை- இவ்வாறு பலவிதமாய்ப் பன்னிப் பன்னிப் பேசுதல் எதற்காக? நீர் - நீங்கள், என்னை இறைவன் ஆக்கி - என்னை அரசனாகச் செய்து, இராப்பகல் இயற்ற அன்றோ - இடைவிடாது இரவும் பகலும் உடனிருந்து உறுதிமொழி கூறி உதவிபுரிந்ததால் அன்றோ, யான் இன்ன நீர் இன்ப வெள்ளம் இயைந்து- நான் இத்தன்மைத்தாகிய இன்பவெள்ளத்தில் ஆழ்ந்து நுகர்ந்து, உயர்ந்தது - மேம்பட்டு ஓங்கியது, என்றான் - என்று சொன்னான்.

மன்னுநீர் - நீர் என்றும் வற்றாத கடல். இயற்ற - அமைச்சுத்தொழில் புரிந்து உதவ. இன்ன நீர்: நீர் - தன்மை.

---

254. கொங்குடை வயிரக் குன்றின்
கொழுஞ்சுடர் விளக்கிட் டாங்கு
நங்குடி விளங்க வந்த
நங்கைதன் னலத்திற் றோத்தான்

தங்குடி விளங்க நின்ற
தன்மையா னெவன்கொ லென்றான்
சங்குடைந் தனைய தாழைத்
தடமலர்த் தொடைய லானே. 17.

சங்கு உடைந்த அனைய தாழை, - உடைந்த சங்கின் துண்டுகளைப்போன்ற வெண்டாழையின், தட மலர்த் தொடையலான் - பெரிய மலர்களாலாகிய பூமாலையை அணிந்த மன்னன், கொங்கு உடை - தேனையுடைய, வயிரக்குன்றின் - வயிரமயமான மலையி னுச்சியில், கொழும் சுடர் விளக்கு இட்டாங்கு - செழுமையான சுடரோடு கூடிய விளக்கை ஏற்றி வைத்தாற்போல, நம்குடி விளங்க வந்த - நமதுமேன்மைவாய்ந்தகுலம் சிறப்புற்று விளங்கும்படி தோன்றிய, நங்கைதன் நலத்திற்கு ஒத்தான் - பெண்களிற் சிறந்த சுயம்பிரபையின் அழகு குணங்களுக்குப் பொருந்தியவனும், தம் குடி விளங்க நின்ற தன்மையன் - தம் குலம் விளங்கும்படி தோன்றினவனும் ஆகிய நாயகன், எவன்கொல் - 'யாவனோ,' என்றான் - என வினவினான்.

கொங்குடை வயிரக்குன்று - இல்பொருளுவமை. கொங்குடை என்ற அடையின் பொருத்தம் புலப்படவில்லை.

நவராத்திரி

[ஓர் நாடகம்]

[468-வது பக்கத் தொடர்ச்சி]

துரை:-(தலையை மேலும்கீழும் ஆட்டிக்கொண்டு, இடது கையிலிருக்கும் பொம்மையை மூன்றுதரம் வலதுகையில் சுற்றி, விபூதி தெளித்து) இந்தா-உன் அம்மா, இதோ! இனி, அழாதே! (கொடுக்கிறான்)

தியா:—ஹ ஹா!

ராஜீ:—எவ்வளவு பெரிய பொம்மை! பேரென்ன?

இந்:—(முதலில் வாங்கிக்கொள்ள மறுக்கிறாள்) இதா என் அம்மா? இங்கிருக்கும் பொம்மைகள் போதும். (கையை ஒருவீச்சால் பங்களா முழுதையும் சுட்டிக்காட்டி) கொடு இங்கே! (வாங்கிக்கொள்கிறாள்)

உரு:—பார், நான் சொன்னேனே! (சிரிக்கிறான்)

இந்:—பேச்சு மூச்சில்லா—களிமண்மேல் வெண் மண்பூசி—காது கேளா—கண் பாரா—உள்ளே இதயமில்லா—மூளை யில்லா-கால்கையாடா—கையாலாகா உயிரற்ற—உட்புரை மேனிமினுக்கி இவளா? (வீதிப் பக்கம் வீசி எறிகிறாள்)

காமா:—அடி பாவி!

ராஜீ:—எனக்கு! எனக்கு! (சைகிலை முடுக்கிவிட)

உரு:—டே மாயா—போய் எடுத்து வாடா!

மாயா:—எனக்கு-எனக்கு! (ஓடுகிறான்) ஐயையோ அவள் முந்திவிட்டாளே!

(ராஜீயா மாயாண்டி பின்தொடர, வலப்புறம் மறைகிறாள்)

தியா:—குஞ்சு! என்கண்ணே! நன்றே செய்தாய், வாம்மா இங்கே!

இந்:— எழுதுர் அம்மா எங்கே? அம்மா!

தியா:—நான் இவள் மனதை நேர்நெறிக்குக் கொணர்கிறேன் பாருங்கள்!

துரை:-குழந்தை!—விளையாட்டுப் பருவம்! பொம்மைகளே அவளைத் திருத்தும் என்றெண்ணினேன்—அப்படியா—

காமா:—இந்தாம்மா—பப்பம்!......

உரு.—பப்பமா?

காமா:—பப்பிர மெண்டு! இந்தா (திடுக்கிடுகிறாள்)-போகாதே அங்கே!

இந்:—அம்மா எங்கே?

தியா:—மந்திரியுங்கள் சாமியாரே—பப்பிரமெண்டில் கூட இருப்பதாக!—தித்திக்கத் தித்திக்கச் சுதந்திரதேவி—

உரு:—சப் சப்!-சத்து, சாமியார் மீண்டும் யோசிக்கிறார்.... என்னிடம் கொடுங்கள் பப்பிரமெண்டை! இருக்கிறதோ—

காமா:—எப்பொழுதும் மடியில் ஏழெட்டு வைத்திருப்பேன். திடுக்கெனக் கொடுக்கவேண்டிவந்தால் என்ன செய்வது! டப்பா டப்பாவா, எவ்வளவு வாங்கி.........

தியா:—அதைத்தான் தொடவில்லையே இவள்!—டப்பா டப்பாவாக வாங்கித் தின்னுளா? ஓகோ, தின்க ஆளில்லையா என்ன?

காமா:—யார்? நான் தின்கிறேனு—இவள்தான்... இந்தா—உனக்கு வேணுமானல் எடுத்துக்கொள். வெட்கம் வேண்டாம்!

உரு:—(வாங்கிக்கொண்டு) பேஷ்! கண்ணுக்கும் பகட்டு (ஒன்றை வாயில் போட்டுக்கொண்டு) வாய்க்கும் இனிமை—நாவுக்கு ருசி!

தியா:—பல்லுக்குக் கல்லு!

இந்:—அம்மா எங்கே? அதோ-அங்கே-அங்கே-(கையைக்காட்ட).

காமா:—எங்கே மரத்திலா?

உரு:—அந்தப் பொம்மையைக் காட்டுகிறாள். விட்டுவிடுங்கள், போய் எடுத்துக்கொள்ளட்டும்!

இந்:—அதோ, அழைக்கிறாள்—போகிறேன்-தலைமயிர் ஆடுகிறது. தலைபசைத் தழைக்கிறாள் (வெளியே ஓடுகிறாள்)

தியா:—எங்கேம்மா? என்னவோ செய்துவிட்டான் மாயம். இந்தச் சாமியார் சொக்குப்பொடியே தூவி விட்டான்!

காமா:— அந்த வெள்ளைப்பொம்மைக்குத்தான் ஓட்டம். அம்மாடி, என் கவலை ஒழிந்தது....

தியா:—என் கவலை எழுந்தது! (இந்திரையைத் தொடர்ந்து வெளி ஓடுகிறான்)

உரு :—இனியேனும் சாமியாரை நம்புவீர்களா? அவன்கூட நம்பிவிட்டான்....

காமா :—காப்பி கொண்டுவருகிறாள். அதனுடன் காணிக்கையும் கொணர்கிறேன். அடியேனது இன்னொரு விண்ணப்பம். உருமபிள்ளை, என்னை அறிவாய் நீ, எப்படியாகிலும் இதை முடித்துவைக்க வேண்டும். உன்னை எவ்வளவு அன்புடன் வைத்துக்கொண்டிருக்கிறேன். என்மகன் உன்னைத் துரத்தியடிக்க வேண்டுமென்று உன்மீது சீறி விழுந்தபோது உனது திறமைகளை மெச்சி நான் உனக்காகப் பரிந்துபேசி....

துரை :—என்ன விண்ணப்பம் சொல்லுங்கள்!

உரு:—எப்படியாகிலும் செய்து முடிப்பார்—நான் முடிப்பிக்கிறேன்-நன்றிமறவேன்-அன்புமறவேன்!

காமா :—வேறொருவருக்கும் இந்தச் சங்கதி தெரியக்கூடாது—ரகசியமாய்.....

உரு :—இவர் மௌனசுவாமியே என்று சொல்லலாம், லோகோபகார்த்தம்தான் திருவாய் மலருவார்...

துரை :—பயம் வேண்டாம்!

காமா :—நீயோ? உருமபிள்ளை !...

உரு :—மோட்டார் சத்தத்தில் நான் பேசினாலும் யாருக்குக் கேட்கப்போகிறது....

காமா :—உன்மேல் முழுநம்பிக்கையை வைத்து நீ இருக்கும்போதே சொல்கிறேன்—அந்தப் பூச்சி எங்கே!

உரு :—சாமியார் சமைத்துப் படைத்ததா?

காமா :—இதுவே என் கோரிக்கை. பழுப்பிலைகளையும் செத்தைகளையும் உருவாக்கி உயிர்கொடுக்கும் இக்கலியுகப் பிரம்மன் உமக்கு ..

துரை :—என்ன என்ன புதிதாய்ப் படைக்கவேண்டும்?

காமா :—புதிதாய் ஒன்றும் வேண்டாம். பழமையையே புதுக்கச் சொல்கிறேன்...

உரு :—என்ன? தெளிவாய்ச் சொல்லுங்கள்!

துரை :—தெரிந்தது—தெரிந்தது...

காமா :-பின் நான் பேசுவானேன்-என்குறையைத் தீர்த் தருளுங்கள்!

[கண்கலங்கித் தேம்புகிறாள்]

உரு :—ஏனம்மா! என்ன சங்கதி!

துரை :—நாணம் கூடாது-தைரியம் கொள்ளுங்கள்—தெளிவாய்ச் சொன்னால்......

காமா :--(கண்ணைத் துடைத்துக்கொண்டு) வெட்கம் நெஞ்சை அடைக்கிறது!

உரு :—வெட்கமென்ன—உங்களுக்கு? தொண்டு கிழவி!

காமா :—ஆம்—அம்பட்டனிடம் தலையைக்காட்டவில்லையா—மொட்டைத் தலைச்சியாய்த் தெருவில் அலையவில்லையா—வெட்கக் கேடியே நான்.

உரு :— ஓகோ! மீண்டும் மயிர்--கூந்தல்-முன்போல் முளைத்தெழுந்து புரளவேண்டும் என்று ஆசையா?

[சிரிக்கிறான்]

துரை :—வாய்விட்டுச் சொல்லுங்கள்! இதுதானா?

காமா :—அதுமட்டும் போதுமா—இள உடலில் நரைமயிர் நகைக்கிடமாவதுபோல், கருங்கூந்தல் இத்திரைத்தோலை அழகுசெய்வதில் என்ன பயன்?

உரு :—சாமியாரே—தெரிந்ததா......

துரை:—குமரியாக்கவோ (மேலும்கீழுமாய்த் தலையை அசைக்கின்றான்)

காமா :—முடியாதா? தலையசைக்கிறீர்களே—

உரு:—காதுக்குக் காது அசைக்கவில்லை...யோசிக்கிறார். கிழவியைக் குமரியாக்குவது எளிதா? பெரிய யோகிக்கும்—

காமா:—நான் என்ன கிழவியா? ஒரு பிள்ளையே பெற்றேன்—கைனியானேன்...கசந்து வழியும் வாழ்வே கிடைத்தது.—வயது என்னாய் விட்டது எனக்கு?

துரை:—(கண்ணைத்திறந்து, காமுவை ஏற இறங்கப் பார்த்து) ஊகித்தேன்—காரியம் எளிதல்ல, ஆனால் அரிதுமல்ல—"எளியன் நீ அரியன் நீ" என்று கடவுளைப் புகழ்வதுபோல், அரிதாகிலும் எளிதே—முயன்று பார்க்கிறேன்—சிவனருள்!

காமா:—விளம்ப வெட்கமா யிருக்கிறது—எனது முன்னைய அழகும் இளமையும் மீண்டும் வருமானால், எனக்கு நகைகள் பின் எதற்கு? சென்ற முப்பது வருடங்களாய்ப் பெட்டியில் புழுங்கிக்கொண்டிருக்கும் நகைகளை அப்படியே—ஒருங்கே தங்களிடம் ஒப்புவிக்கிறேன் (துரைசிங்கன் தலையை ஆட்ட) தலையை ஆட்டவேண்டாம், அவை எனக்கெதற்கு? உலகம் பிழைக்கும்படி தாங்கள் அவைகளைத் தான தருமங்களில் செலவுசெய்துவிடலாம்.

உரு:—(சந்தோஷத்துடன்) சடங்குகள், பூஜைகள், யாகங்கள் முதலியன செய்யவேண்டி வருமே...சாமியாரே! முதலிலேயே பணம் வேண்டுமோ—பின்னர்ப் போதுமா?

துரை:—முன்னரும்வேணும், பின்னரும்வேணும்.

காமா:—இப்பொழுதே நான் ஒரு நொடியில் கொடுத்துவிடுகிறேன். இப்பொழுது குஞ்சுவை நேர் வழிக்குக் கொணர்ந்ததுபோல் தங்களிடம்ரசைஷயோ, குளிகையோ,பஸ்மமோமூலிகையோகையிலொன்றுங் கிடையாதா?—பையைச் சோதித்துப் பாருங்கள்.

உரு :—அந்தப் பெண் எங்கே?

காமா :—யாரு? துலுக்கச்சியா?

உரு:-இங்கு நின்றாளே...வெள்ளை வெளேலென... அணிந்திருந்த கறுப்பாடையால்தன் அழகை இன்னும் பளீச்செனக் காட்டினவள்?

காமா :—காப்பிபோடப் போயிருக்கிறாள்!

உரு :—சீக்கிரம் வரச்சொல்லுங்கள்—காப்பிக்காகத் தான் அவளைப்பற்றிக் கேட்டேன்—சாமியார்....

காமா:—என்ன பதில்-சாமியாரே...என் கவலையை ஒழிக்கிறீரா-இந்தக் குஞ்சுவின் கவலையினால் சென்ற நான்குமாதமும் நானூறுமாதமாய், கண்ணுங் கம்பலையும் கைம்மைக் கனற்சியும் கைப்புச் சனியுமாய்—எல்லாம் என்னை வாட்டி எரிக்கிறது!

உரு :—கவலைவேண்டாம், சீக்கிரம் வரச்சொல்லுங்கள்...சரி—சாமியாரிடம் பேசிக்கொண்டிருங்கள்—ரகசியமேதேனும் இருக்கலாம், நான் போகிறேன்—

[புறப்படுகையில்]

காமா :—காப்பியைக் கொண்டுவரச் சொல்லு நீயே ...ஆனால் - இதோ - ஒரு சங்கதி - உருமபிள்ளை - உன்னால்தான் முடியும் - நீ இங்கேயே இரு. இந்த என் கோரிக்கையை கீழே இந்தச் சாமியாரும், மேலே அந்தச்சாமியும் நிறைவேற்றி வைத்தால் உன்னை என்றைக்கும் இந்தப் பங்களாவிலேயே நான் வைத்துக் கொள்கிறேன்......வேலைதேடிப் பாரந்தலைந்து நீ இனிச் சீரழியவேண்டாம்...யார் வந்தாலும்—என் மகனேயாகிலும் சரி—உன்னைக் காப்பேன்-ராஜபோகமாய் வாழலாம் நீ - கவலைகளின்றி!

உரு :—(போய்க் கொண்டே) அப்படியே!

காமா:-கவனமாய்க் கேட்கவில்லை நீ. முழுதும் நீ தெரிந்துகொள்ளவில்லையே ....(சிரிக்கிறாள்)

யாப்பிலக்கணம்

தொடை — விகற்பங்கள்.

[474-வது பக்கத் தொடர்ச்சி]

இரட்டைத்தொடை அந்தாதித்தொடை செந்தொடை ஆகிய இந்த மூன்றுவகைத் தொடைகளும் அமைந்து வருகின்ற இடவேறுபாட்டினால் விகற்பப் படுவதற்கில்லை என்பது வெளிப்படை. மற்ற, மோனை எதுகை முரண் இயைபு அளபெடை என்னும் ஐந்து தொடைகளும், எவ்வெந்தச் சீர்களில் அமைகின்றன என்னும் வேறுபாட்டிற்கு இணங்கி விகற்பப்படலாம். இத்தொடைகள் முன் விளக்கிய இலக்கணங்களின் படி அடிக்கும் அடிக்கும் அமையலாம்; அல்லது ஓரடியின்கண் உள்ள சீர்களிலேயும் அமையலாம். சீர்களிலாயின், முதற்சீரிற்கும் இரண்டாஞ்சீரிற்கும் அமையலாம்; அல்லது முதற்சீரிற்கும் மூன்றாஞ்சீரிற்கும்அமையலாம். இப்படியே இன்னும் பலவிதங்களில் இத்தொடைகள் விகற்பப்பட இயலும் என்பதைக் கீழே காட்டுவோம். விகற்பங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற வேறுவேறு பெயர்களைச் சிறிதிங்குத் தெரிந்துகொண்டிருப்பது நலம்.

செய்யுளடிகளில், இரண்டு சீர் உடைய அடியைக் குறளடி யென்றும், மூன்று சீருடையதைச் சிந்தடி யென்றும், நான்குசீர் அடியை அளவடியென்றும், ஐந்து சீருடைய அடியை நெடிலடி யென்றும், ஐந்திற்கு மேற்பட்ட சீர்களுடைய அடிகளைக் கழநெடிலடியென்றும், அழைப்பரென்பது உங்களுக்குத்தெரியும். அவைகளில், நான்கு சீர்களுடைய அளவடியே, மிகையும் குறையுமின்றிச் சிறப்புடன் நடப்பதாகக் கருதப்படுகின்றது. ஆதலின் அளவடியைக் கருத்தில்வைத்தே தொடைகளின்விகற்பங்களை இலக்கண நூலோர் காட்டுகின்றனர்.

தொடை விகற்பங்கள், அடி இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று, என எட்டு விதப்படும். ஐவகைத் தொடைகளில் ஒவ்வொன்றிற்கும் இந்த எட்டு விகற்பங்களும் உள.

இயைபுத்தொடைக்கு மாத்திரம் ஒரு சீர், அடியின் ஈற்றுச்சீரா யிருத்தல் அவசியம். மற்ற நான்குவகைத் தொடைகளுக்கும் ஒருசீர் முதற்சீரா யிருத்தல்வேண்டும். அவ்வந்தத் தொடைக்கு உரித்தாகிய மற்றச் சீர் (அல்லது சீர்கள்) வேறு எதுவாயினும் ஆகலாம். மோனை எதுகை முதலிய ஐந்து தொடைகளும், அமைகின்ற எண்வகை விகற்பங்களுக்கு ஏற்றபடி பின்வருமாறு பெயர் பெறும்.

மோனை:—

அடிமோனை, இணைமோனை, பொழிப்புமோனை, ஒரூஉமோனை, கூழைமோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய்மோனை, முற்றுமோனை

இப்படியே, அடியெதுகை இணையெதுகை....... எனவும்; அடிமுரண் இணைமுரண்.......எனவும்; அடியியைபு இணையியைபு......எனவும்; அடியளபெடை இணையளபெடை.........எனவும் ; பெயர்கள் அமைத்துக்கொள்க.

———

(1) அடி—மோனை யெதுகை முதலியன.

தொடை அமைவதற்குரிய சீர்களில் ஒன்று ஓர் அடியிலும் மற்றது வேறோர் அடியிலும் இருக்குமாயின், அத்தொடைவிகற்பம் அடி எனப்படும். எனவே தொடையின் வகைக்கேற்றவாறு, அடிமோனை அடியெதுகை அடிமுரண் அடியியைபு அடியளபெடை என்று ஆகக்கூடுமென்பது புலப்படும்.

அடிமோனை:—

மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப

ஓரடி முதலில்வந்த எழுத்தே மற்றஅடி முதலிலும் ஒன்றி வந்திருத்தலா லிது அடிமோனைத் தொடை.

அடியெதுகை:—

மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

முதலடிக்கண் முதற்சீரின் இரண்டாமெழுத்தும், அடுத்தஅடி முதற்சீரின் இரண்டாமெழுத்தும் ஒன்றியிருப்பதால்—அடியெதுகை.

அடிமுரண்:—

இருள் விரிந்தன்ன மாநீர் மருங்கின்
நிலவு குவிந்தன்ன வெண்மண லொருசிறை

இருள் நிலவு என ஈரடிகளின் முதலும் முரணி நிற்றலால்—அடிமுரண் தொடை.

அடியியைபு:—

மாயோன் கூந்தற் குரலு நல்ல
கூந்தலின் வேய்ந்த மலரு நல்ல

ஈரடிகளின் ஈற்றிலும் 'நல்ல' என்ற ஒரே சொல் ஒன்றி வந்திருத்தலால்—அடியியைபுத் தொடை.

அடியளபெடை:—

தூஅய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

ஈரடிகளின் முதற்சீரிலும் அளபெடை அமைந்திருத்தலால்—அடியளபெடைத் தொடை.

———

இணை முதலிய மற்ற ஏழு விகற்பங்களும், ஓரடியின் கண்ணே பலசீர்களுக்கிடையே அமைவன.

(2) இணை—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள், ஓர் அடியின் முதற்சீரும் இரண்டாம் சீருமாகச் சேர்ந்து அமையுமாயின் அவ்விகற்பம் இணை எனப்படும்.

இணைமோனை:–

இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

முதல் இரண்டுசீர்களின் முதலிலும் மோனைஎழுத்துக்கள் வந்தன.

இணையெதுகை:—

அஞ்சா நெஞ்சின் னடுகளஞ் சேர்ந்து
துஞ்சிய மகனைத் தூக்கின னெடுத்து

இதனில், முதலடியின்கண், முதலிரண்டு சீரினும் இரண்டாமெழுத்தொன்றி இணை யெதுகை விளங் கிறது.

இணைமுரண்:—

மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர்
வளிமுதலா வெண்ணிய மூன்று.

முதல் இரண்டுசீர்களின் சொற்களும் முரண்பட நிற்றலால் இணைமுரண் ஆயிற்று.

இணையியைபு:—

காவா யென்னைக் கோவே கோவே.

இதனில், ஈற்றுச்சீர் இரண்டும் ஒரேசொல்லாய் ஒன்றியிருத்தலால் இணையியைபு ஆயிற்று.

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

முதலடியின் கடைச்சீரின் ஈற்றெழுத்து அதன் முன்சீரின் ஈற்றெழுத்தோடு ஒன்றி வந்திருத்தலால், இணையியைபு ஆயிற்று.

குறிப்பு:—மற்றத் தொடைகளுக்கு அடியின் முதற் சீரை ஒன்றாகக்கொண்டு பார்ப்பதுபோல், இந்த இயைபுத் தொடைக்கு ஈற்றுச்சீரையே முதலாக வைத்து அதற்கு முன்னிருக்கின்ற சீர்களைக்கொண்டு விகற்பங்களை உணர வேண்டும் என்பது எளிதில் புலப்படும்.

இந்தக் குறளில், பெருமை சிறுமை என்ற இரண்டுசொற் கள் அடுத்தடுத்து முரணி நிற்றலால் இது இணைமுரணோ என்று மயங்கற்க. இணைமுரணுவதற்கு ஒரு சீர் அடியின் முதற்சீராகி இருத்தல் வேண்டுமென்றோ?

இணையளபெடை:—

ஆழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

அடியின் முதற்சீரோடு அதற்கு அடுத்தசீரினும் எழுத்து அளபெடுத்திருத்தலால் இது இணையள பெடை யாயிற்று.

குறிப்பு:—அழிவது ஆவது, என முதலிரண்டு சீர்களின் சொற்களும் முரணி நிற்றலால் இது இணைமுரணு மாகும்.

(3) பொழிப்பு—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள், ஓரடியின் முதற் சீரும் மூன்றாஞ் சீருமாய்ச் சேர்ந்து இயையுமாயின், அவ்விகற்பம் பொழிப்பு எனப்படும். எண்வகை விகற் பங்களினும், பொழிப்பு என்னும் விகற்பமே சிறந்த தெனச் சிலர் கருதுவர். எல்லாச் சீரினும் ஒரு தொடை ஒன்றிவரும்படி அமையும் முற்று என்னும் விகற்ப மும் சிறப்புடைத்தெனக் கருதலாம்.

பொழிப்புமோனை:—

போய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.

இதன் முதலடியில்,முதற்சீரின் முதலில் போ என் னும் எழுத்தும் மூன்றாஞ்சீர் முதலில் பு என்னும் எழுத்தும் மோனையாகி நிற்றலால் பொழிப்புமோனை யாயிற்று.

பொழிப்பெதுகை:—

யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

முதலடியில், முதற்சீர் இரண்டாமெழுத்தும் மூன் றாஞ்சீர் இரண்டாமெழுத்தும் ஒன்றியதால் பொழிப் பெதுகை யாயிற்று.

பொழிப்புமுரண்:—

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

முதலடியில், செல்லுதல் வருதல் என்னுங்கருத்து முதற்சீரிலும் மூன்றாஞ்சீரிலுமாக முரணி நிற்றலால் பொழிப்புமுரண் ஆயிற்று.

பொழிப்பியைபு:—

ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

ஈற்றுச்சீரின் ஈற்றெழுத்தோடு அதற்கு முன்னின்ற மூன்றாஞ்சீரின் ஈற்றெழுத்தும் ஒன்றி இருத்தலால் இது பொழிப்பியைபு. இயைபுத்தொடைக்கெல்லாம் ஈற்றுச்சீரை முதற்சீர்போல் பாவித்து நாம் எண்ண வேண்டும்.

பொழிப்பளபெடை:—

பூஉக் குவளைப் போஒ தருந்தி

முதற்சீரிலும் மூன்றாஞ்சீரிலும் அளபெடை யமை யப் பொழிப்பளபெடை ஆயிற்று.

(4) ஒரூஉ—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள் ஓரடியின் முதற் சீரும் நான்காஞ் சீருமாய்ச் சேர்ந்து இயையுமாயின், அவ்விகற்கம் ஒரூஉ எனப்படும்.

ஒரூஉமோனை:—

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

ஒரூஉ எதுகை:—

மண்ணொ டியைந்த மரத்தனையர் கண்ணொ
டியைந்துகண் ணோடா தவர்.

ஒரூஉமுரண்:—

நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

ஒரூஉ இயைபு:—

அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்

குறிப்பு:—ஈற்றுச் சீராகவந்த சொல்லே, அதற்கு முன்னின்ற நான்காவது சீரோடு ஒன்றிவந்திருத்தலால் இது ஒரூஉ இயைபு. இப்படிக்கு அல்லாமல் முதற் சீரோடு நான்காஞ்சீர் ஒன்றியது என்று, இயைபுத் தொடை விகற்பங்களுக்குச் சொல்லலாகாது.

ஒரூஉ அளபெடை:—

காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்

(5) கூழை—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள்,நான்காஞ் சீரொழிய முதல் மூன்றுசீர்களினும் அமையுமாயின், அவ் விகற்பம் கூழை யெனப்படும்.

கூழைமோனை:—

மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

கூழை யெதுகை:—

கள்ளந் துள்ளு முள்ளம் முடையர்

கூழைமுரண்:—

பைங்குழற் கருங்கட் செவ்வா யணங்கே!

கூழையியையு :—

விம்மி யழுவாள் விழுவாள் தொழுவாள்

குறிப்பு:—இயைபுத்தொடைக்குமாத்திரம், முதற் சீர் தவிரவேண்டியது கூழை விகற்பத்திற்கு அவசிய மாகும்.

கூழை அளபெடை :—

மாஅத் தாஅண் மோஒட் டெருமை

(6) மேற்கதுவாய்—மோனை எதுகை முதலியன.

இரண்டாஞ்சீர் ஒழிய, மற்ற மூன்று சீர்களிலும் மோனை முதலிய தொடைகள் அமையுமாயின், அவ் விகற்பம் மேற்கதுவாய் எனப்படும்.

மேற்கதுவாய் மோனை :—

தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து

மேற்கதுவாய் எதுகை :—

கங்குல் சேர்ந்த திங்க ளிங்கு

மேற்கதுவாய் முரண் :—

வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்.

மேற்கதுவாய் இயைபு :—

உள்ளும் புறமும் விள்ளா தொழுகும்

குறிப்பு:—இயைபுத்தொடை ஈற்றுச் சீரை முதலா கக்கொண் டமைவ தாதலால் அதற்கு முதல்நின்ற சீர் இரண்டாவதாகும். ஆதலின், அடியின் மூன்றாஞ் சீரின் ஈற்றெழுத்து இங்கு ஒன்றவில்லை.

மேற்கதுவாய் அளபெடை:—

தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல்.

(7) கீழ்க்கதுவாய்—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள் மூன்றாஞ்சீர் ஒழிய மற்ற மூன்று சீர்களிலும் அமையுமாயின் அவ்விகற் பம் கீழ்க்கதுவாய் எனப்படும்.

கீழ்க்கதுவாய் மோனை:—

தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

கீழ்க்கதுவாய் எதுகை:—

கழுதும் வழிதேடுங் கங்குற் பொழுது.

கீழ்க்கதுவாய் முரண்:—

ஆணலன் பேண்ணலன் மற்றோ ரலியலன்.

கீழ்க்கதுவாய் இயைபு :—

பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

ஈற்றுச்சீரிலிருந்து எண்ணவேண்டியது இயைபுத் தொடையாதலால் அடியின் இரண்டாஞ்சீரின் ஈற் றெழுத்து இங்கு ஒன்றாததாயிற்று. மற்றத்தொடை களுக்கு மேற்கதுவா யாவது இயைபுத்தொடைக்குக் கீழ்க்கதுவாயும், அவைகளுக்குக் கீழ்க்கதுவாயாவது இதற்கு மேற்கதுவாயும் ஆகும். ஒரு உமுரணும் இத னில் அமைந்திருப்பது காண்க.

கீழ்க்கதுவாய் அளபெடை :—

மீஇ ஞாஅர்ந் துகளுஞ் சீஇர்

(8) முற்று—மோனை எதுகை முதலியன.

மோனை முதலிய தொடைகள் நான்கு சீரிலும் அமையுமாயின் அவ்விகற்பம் முற்று எனப்படும்:—

முற்றுமோனை:—

மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

முற்றெதுகை :—

வல்லோ ரெல்லாம் நல்லா ரல்லர்.

முற்றுமுரண் :—

நீருமாய் நிலனுமாய்த் தீயுமாய் வளியுமாய்.

முற்றியையு :—

புயலே குழலே மயிலே யியலே.

ஈற்றுச்சீரின் ஈற்றெழுத்தோடு முன்னின்ற மூன்று சீர்களின் ஈற்றெழுத்துக்களும் ஒன்றியிருத்தலால், இது முற்றியைபுத் தொடையாயிற்று.

குறிப்பு:—கடைச்சீரின் ஈற்றெழுத்தேயன்றி அச்சீராய் அமைந்த சொல்லே மற்ற மூன்று சீர்களும் ஆமாயின் அது முற்றியைபு என ஆகாமல், இரட்டைத் தொடை என்னலாகி விடுகின்றது.

வாழுமே வாழுமே வாழுமே வாழுமே
கூழேனு மீவார் குடி.

என்ற உதாரணத்தினால், முதலடியிலுள்ள சீர்களின் ஈற் றெழுத்தைமட்டும் நோக்குமளவில் முற்றியைபுத்தொடை யும், சீர்களை நோக்குமிடத்து இரட்டைத் தொடையும் ஆவது காண்க.

முற்றளபெடை :—

ஆஅ ஞாஅ நீஇ ணீஇர்

நான்குசீர்களும் அளபெடுத்திருப்பதால் இது முற் றளபெடையாகின்றது.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[476-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

இடவுணர்வு

இரவில் மேன்மாடியில் தெற்கே பார்த்தபடியே குந்தி வானத்தை நோக்குகின்றேன். எனது வலமாக திருவாதிரை என்னும் நாண்மீன் பேரொளியோடு மின்னுகின்றது. இடப்புறமாக, சோதி என்னும் நாண் மீன் சிவந்து மின்னுகின்றது. வலத்திலிருக்கும் திரு வாதிரையைக் காண்பதற்கு என் கண்களும் முகமும் ஒருவாறு திரும்புவதால் இயக்கப் புலனென்று எழு கின்றது; அவ்வாறே சோதியைக் காண்பதற்கும் முக மும் கண்ணும் திரும்புவதால் வேறொரு இயக்கபுலன் எழுகின்றது. இவ்வாறு திருவாதிரைக் காட்சிப் புலனும், திருவாதிரை இயக்கப்புலனும், சோதிக்காட் சிப் புலனும், சோதி இயக்கப் புலனும், என நான்கு வேறு புலன்கள் எழுகின்றன. திருவாதிரைக் காட்சிப்

புலன், திருவாதிரை இயக்கப்புலன் என்று நாம் கூறினுலு மவ்விரண்டிற்கும் ஒருதொடர்பும் இல்லை; ஏன், காட்சிப்புலன் கண்வழியாக எழுவது; இயக்கப்புலன் தசைநார்வழியாக எழுவது. மொட்டைத்தலையும்முழங்காலும் போல நிற்கும் இவற்றை முடியிடுவது எங்ஙனம்? இணைப்புக் கொள்கையின்படி, திருவாதிரைக் காட்சிப்புலனும் அதற்கேற்ற திருவாதிரை இயக்கப் புலனும் இயைந்துவிடுதலால், இடவுணர்வு எழுகின்றதாம். இணைவது என்ருல், திருவாதிரைக் காட்சிப் புலன், சோதியியக்கப்புலனேடு இயைவது தானே? திருவாதிரையியக்கப்புலனேடு இயைவது எதனுலே? திருவாதிரைக் காட்சிப்புலனுக்குத் திருவாதிரையியக்கப்புலனேடு இயைவதே வழக்கம் என்று கூறமுடியுமா? அவ்வாருனல், புலன்கள் தாமே அறிவுடைப் பொருள்கள்போல் தம்முடைய காதலியைத் தேடிக் கலந்து மகிழ்கின்றன எனக் கூறுதல் வேண்டும். திருவாதிரை எனது உள்விழிப்படாத்தின் (Retina)மீது விழும் இடத்தை "ஆ" என்றும், சோதிவிழும்இடத்தை "சோ" என்றும் வழங்குவோம். "சோ என்ற இடத்தில் செம்மையும் ஒருவகையான ஒளியும் இதுபோது காண்கிறேன்; அவ்விடத்திலேயே, வெண்மை, பசுமை வெளிறு முதலிய பலவகையான கட்புலன்கள் எழும். ஆதலின் இப்போதெழுந்த திருவாதிரைக் காட்சிப்புலன் ஒன்றே அன்றி, 'ஆ' என்ற அவ்விடத்தில் எழும் வெண்மை பசுமை முதலிய பலவகைக் கட்புலன்களும், திருவாதிரை யியக்கப் புலனேடு இணைந்து இயையும் வழக்கம் உடையன என்று கொள்ளுதல் வேண்டும். இந்தத் தடையினை அறிந்த சிலர் இம் முட்டுக்கட்டையைத் தாண்ட வேண்டி வேறு வழியில் இக்கொள்கையை மாற்றிக் கொள்கின்றனர். "ஆ" என்ற இடத்தில் எழும் கட்புலன்கள் தத்தமக்கேற்ற சிறப்புநிலை நிறப்பண்புடையனவாக விளங்குவதோடு, பொதுவான இடப் பண்போடும் விளங்குகின்றனவாம். இப் பொதுப் பண்பினை, புலத்தின் இடக்குறி என வழங்குகின்றனர். கண்முதலிய உறுப்புக்களில் ஒவ்வோர் இடத்திலும், அவ்வுறுப்புக்களுக் கேற்ற புலன்கள் எழுவதோடு அவ்வவ் இடக்குறிகளும் அவ்வவற்ருேடு இயைந்து எழுகின்றனவாம். "ஆ" என்ற இடத்தில் எழும் திருவாதிரைக் காட்சிப்புலன் 'ஆ' என்ற தன் இடக்குறியோடு எழுதலினலே, அவ்விடத்திலிருந்தெழுந்த திருவாதிரை இயக்கப்புலனேடு, இயைவது இயல்புதானே. (அகலமும் நீளமும் போல உயரமும் இவ்வாறே எழுகின்றதாம்). இவ்வாறு கூறினல் தடையொன்றும் கூறமுடியாது என்பது உண்மையோ. ஆனல் இஃதோர் அழகிய கனவேயாம். புலன்களைத் தனிப் பொருள்களாக்கி, அவை ஒன்ருேடொன்று பழகி வளர்வதற்காக அவற்றிற் குயிரும் கொடுத்து, அவை தத்தமக்கேற்ற இயக்கப்புலனும் காதலிமாரைத் தேடி மணக்க ஆறறிவும் படைத்துத் தரும் ஒரு நான்முகக் கடவுளின் தொழிலேயாகும். ஒன்றுமில்லாத இடத்தில் மாஞ்செடி வளர்த்துப் பழத்தை நாமுண்ணத் தருவானைப் போல், இடவுணர்வு என்பது மருந்துக்கும் இல்லாத கட்புலன் இயக்கப்புலன் முதலியவற்றின் கூட்டுறவாலேயே பருப்பொருள்களின் இடவுணர்வை எழுப்பித்தரும் கண்கட்டு விளையாட்டே இக்கொள்கை என்க.

இரண்டாவது கொள்கையினர், ஒவ்வொரு புலனும் இடவடிவம் கொண்டே எழுகின்றன என்று மன்ருடுகின்றனர். ஒரு சிறு ஆணியைக் கொண்டு கீறுவதால் உண்டாகும் ஒலியைவிட, இடியொலி "பருத்திருப்பதாகத்" தோன்றுகின்றது. ஊசிமுனையால் விரலிற் குத்திக்கொள்கிறேன்; வெந்நீர்க் குழாயடியில் குந்திக் குளிக்கிறேன். ஊசியுணர்ச்சி நுண்ணியதாகவும், குளிக்கும் உணர்ச்சி மிகப் பரந்ததாகவும் தோன்றுகின்றன அன்ருே? நண்பகலில் வானத்தைப் பார்க்கிறேன்; மாலையிருளில் முதலில் தன்னந்தனியே எழுந்த வான்மீனைப் பார்க்கிறேன். தனி வான்மீனை விட, நண்பகல் வானம் மிகப் பரந்துள்ளது என்ற உணர்ச்சி எழுகின்றதன்ருே? சிறு கீறலால் எழும் நோயைவிட வயிற்றுவலி மிகப் பரந்துதோன்றுகின்றதன்ருே! கண்ணிமைப்பதால் எழும் இயக்கப் புலனைவிடக் காலையசைப்பதால் எழும் இயக்கப்புலன் பருத்து விளங்குவதுபோலத் தோன்றவில்லையா? நுண்ணியதாக எழும் மணங்களையும் பரந்தெழுவது போல் தோன்றும் மணங்களையும் நாம் எளிதில் அறிவோம் அன்ருே? தாமரை முதலிய பூக்களினுடைய மணத்தையும் குய்ப்புகை மணத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். தித்திப்புச் சுவை பரந்து விளங்குகிறது. கார்ப்புச்சுவை எழும்போது சிலர் 'சுரீல் என அண்டிக்கொள்கிறது" என்பர்; புளிப்புச் சுவை எழும்போது "பல் கூசுகிறது" என்பர். எனவே, கார்ப்பும் புளிப்பும் சிற்றளவினவாகத் தோன்றத் தித்திப்பு முதலியன பரந்து விளங்குகின்றன. தலைவலி பசி முதலியனவும் இடப்பரப்புடையனவாகவே விளங்குகின்றன. நோயால் வருந்தும்போது நமது உடற்பருமை முழுதும் நினைவிற்கு வருகிறது; நடக்கும்போது உடலைச் சுமந்து செல்வதுபோலப் போகும் இடத்திற்கெல்லாம் கொண்டு செல்கின்ருேம். இவ்வாறு எல்லாப்புலனும் இடவடிவோடு எழுந்தாலும், கண்ணும் தோலுந்தான் இடவுணர்விற்கு இன்றியமையாச் சிறப்பினவாக விளங்குகின்றன. இடவுணர்வின் பல வேறுபாடுகளைப் பிரித்துணரக் கூடியன கண்ணும் தோலுமேயாம். இடி முழக்கமாம் ஒரு பெரும் பரப்பினைக் காதும் உணர்கிறது; கண்ணும் ஊறும் பரந்த இடத்தைப் பிரித்து வேறுபடுத்துவதுபோலக் காது இடிமுழக்கப் பரப்பை வேறுபடுத்த முடியாது. நாற்காலியைக் கையால் தொட்டே அதனைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். கண்ணுல் கண்டும், கீழ் மேல், வலம், இடம், கால் கை எனப் பிரிக்கலாம். அவ்வாறு இடிமுழக்கத்தின் பரப்புணர்வைக் காது வேறு பிரித்தறிய முடியுமோ? உறுப்புக்கள் சிறியனவாக இருந்தால் அவைவழியாக வரும் இடவுணர்வு சிறியதாகஇருக்கும் என்பதில்லை. கண்ணும்காதும் மிகமிகச் சிறிய உறுப்புக்கள். ஆனல், மலைமேலிருந்து பார்ப்போமானல், அகன்ற நிலப்பரப்பைக் கண் உணர்கின்றது. காதும் பேரிடி முழக்கத்தை உணர்கின்றது. தோல், மூக்கு, நாக்கு முதலியன இத்தகைய பெரும் பரப்பை உணர்தல் கூடுமோ? ஆதலின் உறுப்பின் அளவுக்கும் உணரப்படும் இடத்தின் அளவுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை.

ஒரு கண்ணுல் பார்த்தால் இந்த ஏடு சிறிதாகத் தோன்றுகிறது. இரண்டுகண்ணுலும் பார்த்தால்சிறிது பெரிதாகத் தோன்றுகிறது. பொதுவாகப் பல நரம்பு

முனைகள் கிளர்ச்சியுற்றால், பெரிதென்ற உணர்ச்சியும், சில நரம்புமுனைகள் கிளர்ச்சியுற்றால் சிறிதென்ற உணர்ச்சியும் எழுகின்றனவாம். நுண்ணுணர்ச்சியுடைய கண், நாக்கு, விரல்நுனி முதலியவற்றில் மற்றையவிடங்களில் இருப்பதைவிட, நரம்புமுனைகள் பல்கிக்கிடக்கின்றன. பொதுவாக இவ்வாறு கூறலாமேயன்றி, ஒரு கண்ணால் பார்க்கும்போது தோன்றும் வடிவினும் இருகண்களால் பார்க்கும்போது தோன்றும் வடிவம் இருமடங்கு பெரிது என்று கூறுவதற்கில்லை.

இவ்வாறு புலனாக எழுகின்ற இடவுணர்வு பொதுவுணர்வேயன்றிச் சிறப்புணர்வு அன்று. பொதுவாகப் பரப்பினையோ பருமையையோ காட்டி நிற்கின்றது அவ்வுணர்வு. "இவ்வளவு பருமை; இத்துணைப்பெரியது" என்று எடுத்துக் கூற முடியாது. இடிமுழக்கத்தின் பரப்பினை எத்துணைப் பருமன்என்று கூறுவோம். அகலம் நீளம் உயரம் ஆழம் என்ற வேறுபாடும் அங்குக் காணோம். எல்லாம் கலங்கிக் குழம்பிக்கிடக்கின்றன. இவ்வாறு எழும் பொதுஉணர்வை, ஊன்றி எண்ணிப்பார்த்து அளந்தும் பிரித்தும் வேறுபடுத்திப் பின்னர் இனம் இனமாக ஒன்றுசேர்க்கும்போது நாம் அறிந்த அகல நீளங்கள் எழுகின்றன. முன்னில்லாததை நமது மனம் புதிதாகப் படைப்பதில்லை; புலனாக எழுந்த இடவடிவுகளை வேறுபடுத்தி ஒன்றோடொன்று இயைபுபடுத்திக் காட்டுகின்றது. யான் இதனை எழுதிக்கொண்டிருக்கும்போது கன்னல் நாழிகையின் (Clock) ஒலியும், குப்புகை மணமும் கூவமாற்றின் காட்சியும், இவ்வேட்டை எழுதிவரும் ஊக்கமும் எல்லாம் எனது நனவில் தனித்தனியே விளங்குகின்றன. சிற்சிலபோது களைத்துப்போய் மல்லாந்து கிடக்கும்போது, முதுகை உணர்ந்தாலும் அதன் நீளத்தை உணர்வது அரிதாகின்றது; சிற்சில போது, காலை உணர்ந்தாலும் கால் எங்குளது என்று அறியாது திகைக்கிறோம். எனவே, தனித் தனியாக உணர்வதால்மட்டும் இடவுணர்வு எழாது. அவற்றை ஒன்றுசேர்த்து ஒரு முதற்பொருளாக வடிவம் கொடுத்து முதலின் சினையாக அவற்றைப் பொருத்தி வைத்தால் இடவுணர்வு எளிதாக எழுகின்றது. ஓர் ஊரைச்சுற்றிவந்த நான் ஒரேநோக்கில் அவ்வூர் முழுதையும் காண்பது அருமையன்றோ? பல சுற்றுத் தெருக்களையும் முட்டுச் சந்துகளையும் தனித்தனியாக எண்ணிப்பார்த்து ஒன்றின்பின் ஒன்றாக வேறு பிரித்தெடுத்து ஓர் ஊராகக்காண்கிறேன். அப்போதுதான் தெரு முதலியன, ஊரின் உறுப்புக்களாகிய இடப்பரப்பிற் பொருந்துகின்றன.

இடப்பரப்பு என்பதுதான் யாது? மும்முனை நாற்புறம், வட்டம் முதலிய வரிவடிவங்கள்—நிலைகள் - தொலைவு - அளவு - முகம் (தெற்குப்பார்க்கிறது தெற்காகப்போதல் முதலியனவற்றால் குறிக்கப்படுவதை முகம் என்று வழங்குவோம், Direction) என்ற சொற்களை இடத்தைப்பற்றிப் பேசும்பொழுது பயன்படுவன. குழம்பிக்கிடக்கும் பொதுவுணர்வின் நின்றும், இவற்றில் ஒன்றையோ பலவற்றையோ வேறு பிரிக்கும்போது, அப் பொதுவுணர்வு ஓர் இயைபுபெற்றுச் சிறப்புணர்வாக மாறுகிறது. முழுப்பரப்பு, இடவடிவமாகிய புலனாக எழுந்ததுபோல, வடிவம், நிலை, தொலைவு, அளவு, முகம் என்பனவும் புலன்களேயாம். வட்டம், மும்முனை முதலியன ஒன்றினொன்று வேறுபட்டுத் தனிச் சிறப்பியல்பு உடையனவாக விளங்குகின்றன. பல அளவினதாக வட்டம் காணப்பட்டாலும் வட்டம் என்ற பொதுத் தன்மையை இயற்கையாகவே புலனாக உணர்கிறோம். வெண்மை, செம்மை முதலிய நிறங்களை உணர்வது போல மும்முனைவட்டம் முதலிய வரிவடிவங்களையும் எவரும் உணர்கின்றனர். இவற்றின் பெயரை அறியாதவனும், இவற்றின் வேற்றுமையை உணர்கின்றான். அவ்வாறே குறுக்காய்ச் செல்லும் வரி, நெடுக்காய்ச் செல்லும் வரி முதலியவற்றையும் குவிமுனை (Acute Angle) விரிமுனை (Obtuse Angle) நேர்முனை (Right Angle) முதலியவற்றையும் புலன்களாகவே யுணர்கின்றோம். தொலைவு என்பது என்ன! இரண்டு நிலைக்கும் இடையுள்ள இடம் அன்றோ தொலைவு!

இரண்டு நிலைகளையும் இரண்டு புள்ளிகளாகக் கொண்டு, அவ்விரண்டையும் ஒன்றுசேர்க்க ஒரு நேர்க்கோடு இழுத்தால், அக்கோடு, தொலைவை உணர்த்துகின்றது. தொலைவும் வரியாக அடங்கி விடுகின்றது. நெடுவரியானால் நம்முணர்ச்சி மாறுகின்றது; குறுவரியானால் வேறு உணர்ச்சி எழுகின்றது. எந்த முகமாக இந்த வரி போகின்றது என்னுமிதுவும் வரி யுணர்ச்சியிலேயே அடங்குமன்றோ?

இடத்தொடர்பு என்று சொல்வது யாது! எண்களின் இயைபு எண்ணாகவே விளங்குவதுபோல இடங்களின் இயைபும் இடமாகவே விளங்குகிறது. 5-க்கும் 10-க்கும் உள்ள இயைபு என்ன? முன்னதினும் பின்னது இருமடங்கு பெரிது; முன்னதினும் பின்னது ஐந்தளவிற் பெரியது என அவ்வெண்களின் இயைபை எண்களைக்கொண்டே விளக்குகின்றோம். அங்ஙனமே இடத்தொடர்பையும் இடம் கொண்டே விளக்குகிறோம். ஒரு புள்ளிக்கும் மற்றொரு புள்ளிக்கும் உள்ள தொடர்புயாது? இவ்விரண்டு புள்ளிகளையும் ஒன்றுசேர்க்கும் வரியே, அந்தத் தொடர்பை உணர்த்துகின்றது. அந்த வரியே அந்த இயைபு. அந்த வரியை உணர்ந்தபோது நாம் அந்த இயைபை உணர்கின்றோம். அந்த வரியானது நமது மனக் கண்ணெதிர் வாராதபோது அவ்வியைபை எடுத்துக்கூறுவது இயையாததொன்றாம். இரண்டு வரிகளுக்கும் உள்ள முகத்தொடர்பு முனைவடிவமாக இருத்தலின் முனைத்தொடர்பு (Angular Relation) என வழங்கப்படும். ஒரு வரியிலிருந்து மற்றொருவரி எந்த முகமாக இருக்கின்றது என எண்ணும்போது, அவ்விரண்டையும் ஒருமுனையில் சேர்ந்துபிரிவனவாகக் கொண்டு, அத்தொடர்பை யுணர்கின்றோம். ஒரு நிலைக்கும் மற்றொரு நிலைக்கும் உள்ள நிலைத்தொடர்பு தான் யாது? மேல்நிலையிலுள்ள பொருளுக்கும் கீழ் நிலையிலுள்ள பொருளுக்கும் உள்ள தொடர்பை, இடையே ஒரு கோடிட்டு, அவ்வை இரண்டையும் அந்த நேர்க்கோட்டால் ஒன்றுசேர்த்துப் பார்க்கிறோம் ஆகவே நிலைத்தொடர்பும் வரியுணர்ச்சியாக முடிகின்றது. வலம், இடம், மேல், கீழ் என்பன எல்லாம் புலன்களேயாம். இவற்றைச் சுட்டிக் காட்டலாமேயன்றி, விளக்கிவைக்க முடியாது. கற்கண்டின் இனிப்பை விளக்கிவைக்க முடியாது; கற்கண்டை உண்டே அவ்வினிப்பை உணர்தல்வேண்டும்.. சுவைப்புலனைப்

போல, வரிவடிவம், புறம், முகம், நிலை முதலியனவற்றையும் புலனாக வுணர்ந்தாலன்றி நூலறிவால் அறிதல் இயலாது. இதனாலும் அவை புலன்களே என்பது வற்புறுத்தப்படுகின்றது. மேல் அளவு என்பதும் புலனேயாம். பெரிது சிறிது என்ற வழக்கு, எண்களைப்பற்றியும், காலத்தைப்பற்றியும் பண்புகளைப்பற்றியும், இடத்தைப்பற்றியும் எழுகின்றது. ஐந்தை விடப் பத்துப் பெரியது; நாழிகையைவிட இமைப்பொழுது சிறியது; செவ்வானத்தின் செம்மையினும், செங்குருதியின் செம்மை மிக்கது; திருப்பதி மலையினும் திருத்தணிகைமலை சிறியது, என்றெல்லாம் பேசுகிறோம். ஆதலின், நிலை தொலைவு வடிவம் முலியன, இடத்திற்கே சிறப்பாய் விளங்குவதுபோல், அளவு என்பது இடத்திற்கே சிறப்பானதன்று; பல நினைவுகளுக்கும் பொதுவானதாகும். ஒன்றைவிட மற்றொன்று சிறிது மிகுந்தபோது இம் மிகுதிப்புலன் எழுகின்றது. ஆதலின் இதனை மிகுதிப்புலன் என வழங்குவோம்.

குழம்பிக் கிடக்கும் இடப்புலனில், நிலை தொலைவு முதலியவற்றை வேறுபிரித்து அவற்றை நனவிற் புகுத்தும்போது இடவுணர்வு எழுகின்றது. இப்பிரிவுகள் அனைத்தும் நனவிற் புகுந்தெழுவது எங்ஙனம்? தங்கிடம், வடிவம், அளவு என இவை முப்பாற்பட்டு நனவில் எழுகின்றன.

ஆலிவர் கோல்ட்ஸ்மித்

எழுதிய

ஓர் இரவின் வருணனை

(A City Night-Piece - by Oliver Goldsmith)

[ஆலிவர் கோல்ட்ஸ்மித் (Oliver Goldsmith) என்பவர் பதினெட்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலப் புலவர்களில் ஒருவர். அவர், தெளிவும் நயமும் நகைச்சுவையும் திகழத்திகழ எழுதும் தனிப்பேராற்றலுடையவர். இவரோ இளமையெல்லாம் வறுமையின் கொடுமையால் வாடிவருந்தினார். அக்காலத்து ஆங்கிலேயமாந்தரின் பேராசையும், தன்னயமும், களியாட்டமும், வாழ்க்கையின் வீண்போக்கும் அப்புலவருக்குக் காணச் சகிக்கமுடியவில்லை. அத்தகைய சிறுமைகளை எடுத்துக்காட்டி மாந்தரை உயர்விக்க வேண்டுமென்னும் நோக்கத்துடனேயே அவர் வரைந்துவந்த கட்டுரைகளில் ஒன்றினை இப்பொழுது நாம் மொழிபெயர்த்துத் தருகின்றோம்.]

ஓரிரவு மணியிரண்டடித்தது. அவியும் விளக்குகள் தம்மொளி மழுங்கின. காவற்சேவகர் எல்லாரும் ஆழ் துயிலில் அயர்ந்துபோயினர். மெய்வருந்தி உழைத்து வாழும் எளியவரும், இருப்பதில் திருப்தியாய் இனிது வாழும் மக்களும் துயிலமர்ந்தார். இன்னபடி உலகெலாம் துயில, உழைத் துழைத்து ஓங்குஞ் சிந்தனையும், குற்றமும், புலன்களை நயந்துபுசிக்கும் காமமாதிகளியாட்டங்களும், கைபற்ற திகைப்புமே கண்விழித்திருந்தன. சிற்றினக்கட்குடியர், குடித்ததெல்லாம் போதாதென்று பின்னுமோர்முறை கள்ளைத் தம் வள்ளத்தில் சொரிந்து மகிழ்கின்றார். பிறர்பொருளில் மனம்வைத்து விவகரிக்கும் கள்வன் அவனது நடுநிசித் தொழில்புரியத் திரிகின்றான். தற்கொலையோ தனது கொடுங் கைகளை நீட்டுகின்றது.

பழமைச் செய்திகளைப்பேசியும், இக்காலப் புலமையின் ஆற்றலைச்சாற்றியும் இவ்விரவை வீணாக்க நான் விரும்பவில்லை. இப்பொழுதுயாருமின்றித் தனியாயிருக்கின்ற இப்பாதையூடு மௌனமாய் நான்நடந்துசெல்வேன். சிறிதுநேரத்திற்குமுன் இவ்வழியிற்றான் நிலையற்ற இடம்பம் நான்பார்க்கத் தான் களிநடம் பயின்றாள்; இங்குத்தான் அவள் தன் பரிவாரங்களோடு கொலுவிருந்தாள். ஆனால் இப்பொழுதோ, அவ்வெற்றுமகள் தன் வீண் ஆரவாரப்பெருமிதமே ஆழ்த்திவிட வோர் குழந்தையென உறங்குகின்றாள். இவ்வண்ணம் ஓதையெலாம் அடங்கியுள்ள இவ்வழி நான் நடக்கலாவேன்.

விண்ணும் மண்ணும் குவிந்த இவ்விருள், அச்சத்தை எய்துவிக்கும் ஓர் நிலைபெற்றுளது. என்னே இந்நிலை. தீபச்சுடர்கள் தம் காந்தியைத் துறந்து வருகின்றன. தூரத்தில் காவல்நாய்கள் குலைக்கின்ற அரவமும் அண்மையிற் சில கெடிகாரங்கள் செய்யும் ஓசையுமல்லாமல் வேற்றொலியேதுமில்லை. மனிதனது அகங்கார மமகாரப்பூசலெலாம் இப்பொழுது அடங்கிக்கிடக்கின்றன. இடம்பச்செருக்கின் வெறுமையை வெளிக்கொணர்ந்து காட்டுதற் கேற்றவோர் வேளையிதுவே.

இப்பொழுது இயங்குகின்ற இத் தனிமைநிலை இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் இருந்தவிடம் தெரியாது போய்விடும். பொழுது புலர்வதோடு இம்மக்களும் தம் ஆரவாரத்தை ஆரம்பித்துவிடுவர். எனினும் இவ்வோய்வும் ஒடுக்கமும் மாறுதலின்றியே தங்கிவிடுகின்ற நிலை இந்நகரத்திற்கு ஒருகாலத்தில் வாராது தீராது. இப்பெருநகரமேயும், இதனில் உறைதருமக்களேபோல் சிதைந்து அறவே மறையலாம். மனித சஞ்சாரமற்ற பாலைவனமாகவும் ஒருகாலத்தில் இவ்வணிநகர் சிதைந்தொழிவதென்பதும் இயலும்.

இந்நகரமேபோன்ற பெருநகரங்கள் பல பண்டொரு காலத்தில் இருந்ததில்லையோ. வெற்றியும் வைபவ வாழ்வும், செல்வச் செழிப்பும் அந்நகரங்களுக்கும் இருந்ததுண்டு. அவ்வெற்றியும், வைபவமும் செல்வமும், அந்நகர் வைகிய மாந்தர் கண்களை அவித்துவைக்க, அவ்வந்தகர், சாவில்லாச் சிரஞ்சீவிகளே தாம் இனி யென்றெண்ணி மதர்த்தனர். அந்நகரங்கள் என்னவாயின, எந்நிலையுற்றன; அவையிருந்த விடந்தான் எங்கென்றும் தெரியாத முடிவே அவைகளின் கதியாயிற்று. வழிப்போக்கன் அப்பாழடைந்த விடங்களைக்கண்டு வருந்தினனாய் நடக்கின்றான். நடக்குங்கால், இத்தகையசெய்தி பழையதேனும் அச்செய்தியின் புதியதோர் நினைவை இவ்வடையாளங்கள் அவன் மனத்தினுள் புகட்டிவைக்கின்றன. உலகப் பொருள்

களும் உடைமைகளையும் நிலையிலாது அழியும் நீர்மைய வாதலைச் சிந்திக்கின்றனன்.

இன்னணம் புதிய அறிவுவாய்ந்த அவ்வழிப்போக்கன் தன்னுளே பின்வருமாறு இயம்புவான்:—

“மாடமாளிகைகளால் முன் அலங்கரிக்கப் பெற்ற இவ்விடமோ, இப்பொழுது புல் பூண்டுகள் செறிந்து கிடக்கின்றன. மந்திரச்சாலைகளோ மாசுணஞ்சூழ்ந்து தங்கும் புதர்களாயின. நெடுமுடிக் கோயில்களும், நாடக அரங்குகளும் வனப்புடன் நின்ற விடம் எதுவென்று தேர்வதற்கும் இயலாதபடி எம்மருங்கும் அழிவின் அலங்கோல ஆட்சியையே காணலாம். ஏன் அவை இந்நிலையுற்றன என்பீரேல், ஐய, வாழ்வினைச்சூழ்ந்த ஆசையும் உலோபமும், இடம்பமுமே இப் பாழ்மைக்குக் காரணமென் றுணர்மின். இவ் வாசையும் இடம்பமும் முடிவினில் அப் பெருநகரங்களின் நிலைகுலைக்கும் கருவிகளாயின. அரசாங்கத்தினர், குடிகளை ஓம்புவதே கடன் என்பது மறந்து, இச்சகம்பேசும் இழிதகைமாக்களை மகிழ்பவராயினர். நாட்டின் செல்வமும், செழுமையின் செருக்கும், வேற்றுநாட்டினர் படையெழுச்சிக்கு அழைப்புக்கடிதங்களாயின. படையெழுந்த பிறநாட்டார் வந்தனர், தோற்றனர், துரத்தவும் பெற்றனர்; எனினும், அன்னவர் விடாமுயற்சியால், இருந்தவர் தம்நாட்டை இறுதியில் இழந்தனர். வளநகர்ச் செல்வமும் செருக்கும் மாய்ந்தன”.

இன்னபடி சொல்லி அவன், செல்வமாதிய செல்வாக்குக்களின் எளிமையை இகழ்ந்தனனுய் வழிநடப்பான்.

இப்பொழுது எவ்வளவு குறைவான ஜனங்கள் கண்ணிற் படுகின்றனர்! சிறிது நேரத்திற்குமுன் எவ்வளவுபேர் இங்கெல்லாம் குழுமியிருந்தனர். இப்பொழுது என் கண்ணிற்படுவோர் பகலில் அவர் புனைந்து கொள்ளும்வேடங்கள்ஒன்றுமில்லாது இருக்கின்றனர். அவர் தம்முடைய துயரத்தையும் இயற்கையையும் மறைத்துக்கொள்ள வேண்டுமெனும் முயற்சியுமில்லை.

மற்றுத் தெருவையே படுக்குமிடமாகக் கொண்டுள்ள ஈங்கிவர்தாம் யாவரோ! செல்வத்தின் கடைவாயில் காத்துநின்று தம்துயர் போகுமாறு சிறிது உறங்குபவர் யார்? இவர் புதியவர், திக்கற்றுத் திரிபவர், பெற்றோர் அற்றவர். தம்குறை தீர்க்கப்பெற வேண்டுமென்று எதிர்பார்க்கவும் இயலாத எளிய நிலையில் இருப்பவர். அமிழ்வதற்கு இனி ஆழமில்லை என்னுமொரு துயரத்தில்விழுந்திருப்பவர். அவர் நிலையோ கருணையினும், வெறுப்பையே பார்ப்பவர்பால் எய்துவிக்கும் பெற்றியதாகும். சிலருக்கு மானத்தை மறைக்கவோர் கந்தைத்துணியுமில்லை. சிலர் நோயினால் தேய்வுற்றிருக்கின்றனர். உலகமோ அவர்களை மனித இனத்தில் சேர்த்துக்கொள்ளாது, பசிக்கும் துன்பத்திற்கும் ஆளாக்கிவிட்டது. இங்கே குளிரினால் குலுங்குகின்ற இம்மாது, முன்னொருகாலத்தில் சுகமாய் வாழ்ந்திருக்கலாம், அழகி இவளென்று கொண்டாடவும் பெற்றிருக்கலாம். வன்கண் காமுகக்களிமகன் ஒரு நொடி மகிழ்ச்சிக்காக இம்மாதின் உடல், மலிந்த விலைக்கு விற்கப்பெற்றிருக்கலாம். இப்பொழுது இவள் குளிரிற்கு இரையாக எறியப்பெற்றிருக்கின்றனள். தங்களை முன் வஞ்சித்து இக்கதிக்குக் கொணர்ந்துவிட்ட கொடியர்பால் இரந்து தம்துயர் நீக்கக் கருதித்தானே அவர் புறங்கடையில் இப்பொழுதிவர் இவ்வாறு பழி கிடக்கின்றனர்? அவ்வன்னெஞ்சினர் இயற்கையில் ஈரமோ யாதுமில்லை. வஞ்சிக்கப்பெற்று வாடுவார் வந்திரக்கக் கடிந்தவரை வெருட்டுவாரே யன்றி, தம்மால் விளைந்ததுன்பத்தையும் தாம் களையார் அக்கீழ்மக்கள்.

ஐயோ, நான் ஏன் மனிதனுய்ப் பிறந்தேன். இப்படித் தெருவெல்லாம் வருந்தித் தவிக்கும் இப்பேதைமாக்களின் நிலைகண்டும், அவர் துன்பத்தை அகற்றி வைக்க இயலாத நான் ஏன் மனிதனுய்ப் பிறந்தேன். ஐயோ பாவம், வீடில்லை வாயிலில்லை. “ஏழைப் பேதைகாள், உங்களை உலகம் தூற்றும், மற்று உதவியொன்றும் தாராது—ஏனெனில் நீங்கள் ஏழைகள். கைப்பொருள் உடையவனுக்குச் சிறிதினும் சிறியதான ஒருஇடர் எய்தினுற்போதும். தானுக நினைத்துக் கொண்டவோர் மனக்கலக்கம் போதும். அவ்வளவு தான்! எல்லோரும் அவனைச்சூழ்ந்து தத்தம் பரிவினை முழங்கிக்காட்டி ஒருவரை யொருவர் விஞ்ச முயல்வார். அவைகளை அகற்றுவதற்கு முயற்சிகள் நடக்கும். ஆனால் ஏழைகளோ கண்ணும் கண்ணீருமாய்த் தவிக்கின்றனர், கவனிப்பாரில்லை. அவர் கஷ்டமே வளர்கின்றது. மற்றவர்க்கு ஆதரவளிக்கும் சட்டதிட்டங்கள் இவர்களுக்கு விரோதமாய் அமைகின்றன.

எனக்கு ஏன் இத்தனை ஈரமுள்ள உள்ளம் இருக்கின்றது. அல்லது பெற்ற ஈரத்திற் கேற்றவளவு செல்வமேனும் எனக்கு இருக்கவேண்டும். கையாலாகாக் கருணையானது, உதவிநாடுவோர் உற்றதுயரினும் மிக்கதோர் துயரில் அஃதுடையவொருவனை ஆழ்த்திவிடுகின்றதே—என்னுரை முடிந்தது, விடைதந்தருள்க.

குறிப்பு:—“சாதலி னின்னாத தில்லை யினிததூஉம் ஈதல் இயையாக் கடை.” என்ற நம் திருவள்ளுவர் வாக்கிற் கிணங்கிய வருத்தத்தோடு ஆலிவர் கோல்ட்ஸ்மித் இக்கட்டுரையை முடிக்கின்ற ஒற்றுமை உணர்தற்பாலது. எக்காலத்தும் எவ்விடத்தும் உயர்ந்தோர் இதயம் ஒருபடித்தாய்த் துடிக்கின்ற உறவினை இது வற்புறுத்துகின்றது.

ஆசிரியர்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[475-வது பக்கத் தொடர்ச்சி]

வாது செய்தவர் வளநகர் மக்களே.

மன்னவனையும் தேவியையும் அன்னநிலைத் துன்பத்துள் விட்டகன்ற வசிட்டமுனிவன் அரசர் திரண்டிருந்த மண்டபங்குறுகி, விளைந்த வரலாற்றை,
கொண்டாள் வரமிரண்டு கேகயர்கோன் கொம்புவட்
தண்டாத செங்கோற் றயரதனுந் தானளித்தான் [குத்
துண்டார் முகிலை வனம்போகென் றெருப்படுத்தாள்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான்

[கேகயராசன் மகள், இரண்டு வரங்களை வாங்கிக் கொண்டாள். குறையாத நீதியுடைய தயரதனும் அவைகளை யளித்தான். அதன்படி, ஒளி பொருந்திய இராமனை வனம் போய்விடச் சம்மதிக்கச் செய்தனள். இதுநிகழ்ந்தவிதம் இவ்வளவே. இது தவிர எள்ளளவும் வேறில்லை—என்றான்]

வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பாரளிப்பா னாயினான்
ஏந்து தடந்தோ ளிராமன் திருமடந்தை
காந்த னொருமுறைபோய்க் காடுறைவா னாயினான்.

[அரசனது கட்டளையினால் கைகேசியின் உண்மைமகனாகிய பரதன், ஆதிசேடன் மீதிருக்கின்ற பூமியைக் காக்கக் கூடியவன் ஆனான். திருமகள் காதலனும் நிமிர்ந்த பெரிய தோள்களை உடையவனுமாகிய இராமன் ஒருமுறை போய்க் காட்டில் தங்குபவன் ஆனான்]

என்னச் சுருங்கச் சொல்லினான். உலகமே தலைகீழாவதற்கு இதைவிட வேறென் வேண்டுமோ! எனினும், முழுவது முணர்ந்த அம்முனிவன் பேராத வாய்மைப் பெரியோனுமாதலின், எம்பெருமான் விளையாட்டுக்களில் ஒன்றே யீதென்னும் உணர்வினால் “எள்தானும் வேறில்லை” என அவலத்தில் பரிகசிப்பான் போல் பகர்ந்தனன். இத்தீச்செய்தி தம் செவி சாராத முன்னர், மாதரும் மைந்தரும் அரசரும் அந்தணரும் மற்றுளோரும் தயரதனைப்போல் சாயந்து வீழ்ந்தனர். வீழ்ந்து புலம்பினர். அப்போழ்து,

புண்ணுற்ற தீயிற் புகையி னுரைபதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகிற் றுடம்பெல்லாம்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டழுத பேரோசை.

[புண்ணில் தீப்பட்டதுபோல் அச்சொற்கேட்டு, அத்தீயிலிருந்து எழும் புகைபோல் வார்த்தைகள் பதைத்தெழவும், அவர் உடமபெல்லாம் தரையில் விழுந்து சுழன்றன. கண்களிலிருந்து வழிந்த நீர் கடலைப்போய்ச் சேர்ந்தது. அப்படியே எல்லாப்பக்கங்களில் விட்டழுத பேரோசை வானத்தை எட்டியது]

மாத ரருங்கலமு மங்கலமுஞ் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்சிவப்பத் தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடியொப்பார்

[கடுங்காற்று வீசி ஒடிந்த பூங்கொடி போன்ற மாதர்—தம் அரிய ஆபரணங்களையும் மங்கல நாணையும் கழித்து, கூந்தலும் (மாலையும) அவிழ்ந்தலைய, எமன்போன்ற கண்களும் தாமரை மலர்போன்ற பாதங்களும் சிவப்ப, பதைத்துத் தரையில் கிடந்தார்]

ஆவா வரச னருளிலனே யாமென்பார்
காவா வறத்தையினிக் கைவிடுவேம் யாமென்பார்
தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந் தேங்கினார்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்நின்றார்

இறைவனே அறம்பிழைத்தால் பின் தாமேன் அதனைத் தாங்கவேண்டுமென்று மற்றையோர் கழறுவது இயற்கையே. பெரியோர் மறஞ்செய்தால் அது அவர் செய்த பாவத்தோடமையாது மற்றவர்க்குந் துணிவூட்டித் தூண்டுதலால், சிறியோர் செய்யும் பல தீமைகளினும் பெரியோர்செய்த ஒருதீமை மிகக் கொடிது. இதனை உணர்ந்தவவ் வாநரத்தலைவன்,

நூலி யற்கையு நுங்குலத் துந்தையர்
போலி யற்கையுஞ் சீலமும் போற்றலை
வாலி யைப்படுத் தாயலை மன்னற
வேலி யைப்படுத் தாய்விறல் வீரனே

[பராக்கிரமமுடைய இராமனே, சாஸ்திர விதிகளையும், உன்குலத்து மூதாதையர்களது இயல்பையும் சீலத்தையும் நீ போற்றாது செய்த இக்காரியத்தால் வாலியை நீ வீழ்த்தினவன் என்பது மாத்திரமல்லாது நிலைபெற்றிருக்கும் அறமென்னும் வேலியையே உடைத்தெறிந்துவிட்டாய்]

என ஏசுங்கால், இங்கு இவ்வரசர் கருதியபடி தயரதன் காவாதறத்தை விட்டவனாயின், என்னும் என்னுந் தன்மையின் காரணம் தெரியக்கூடியதாயிருக்கின்றது.

அறிவுபற்றிய மாந்தரென்போர் மாத்திரமல்லாது,

கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத உருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்

என்பர் கம்பர். கிள்ளையும் பூவையும் பூசையும் பிள்ளையும், ஏனையோர் அழுததுகண்டு தாமும் காரணந் தெரியாமலே அழுதனவோ வென்றயிர்க்காவண்ணம், ‘வள்ளல் வனம்புகுவான் என்ற மாற்றத்தால்’ அழுதன என்று சாற்றுகின்றார். இதற்கிடையில்,

சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்முலைமேற் பூந்தரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றாமழலை நங்கைமா ரேங்கினார்

[செவ்வல்லியையும் சிவந்த கொவ்வைக் கனியையும் போன்ற வாயில் வெண் முல்லை மலர்போன்ற பற்கள் தோன்றவும், அழகிய பெரிய முத்துமாலையின் கயிறு அறுந்ததுபோல் நெருங்கிய முலைகளின்மீது மேகம்போன்ற கரிய கண்கள் நீர்சொரியவும் நாவோடுசேராத மழலைமொழி மிழற்றும் மாதர்கள் ஏங்கினார்]

இவர்களோடு விரவியவருத்தத்தால் மீண்டுமாங்கே,

ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகுங்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதன வம்மன்னவனை மானவே

இவ்வணமந் நகரடங்கலும் மாழாந்துகலுழத் தெருவெல்லாங் கண்ணீராறாகி ஓடிற்று. அவரவரு நெஞ்சங்கூறாகி ஓடாத இத்துணையே குறை. கைகேசியும் அவள் கொடிய தோழி கூனியும் இக்கண்ணீர் வெள்ளத்துள் புனல்விளையாட்டயர்ந்து திளைக்க விழைந்தனர்போலும். இவ்விருவர் ஒழிய ஏனையோர் சிலர் புலம்பி இரங்கியதைக் கம்பர் இயம்புகின்றனர். இந்நிலமகள் செய்த பாவம் பெரிதென்பார்; திருமகள் செய்த பாவம் அதனிற் பெரிதென்பார். இதனைக் காணத் தம் கண்கள்செய்த பாவம் கடலிற் பெரிதென்பார். ஆளான்பரதன் என்பார், மீளான் இராமன் என்பார். மைந்தனுக்குத் தந்தைகொடுத்த கொற்றமுடி கோளாகி வந்ததோ வென்பார். இது கண்டும் மாளாத தம்மில் வலியரிலை என்பார். கைகேசியின் மேல் காதல் முதிராக் கருத்தழிந்தான் இம்மூதரசன் என்பார். கள்ளூறு செவ்வாய்க் கணிகைகாண் கைகேசி யென்பார்.

கையால் நிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள்பொற் கோசலையென் றேவாது வெய்துயிர்ப்
ஐயா இளங்கோவே யாற்றுதியோ நீயென்பார் [பார்
நெய்யா ரழலுற்ற துற்றாரங் கீணகரார்.

இதற்கிடையில் தயரதன் செய்கையின் தகுதி நோக்கித் தெழிப்பாரும் இலராகார்

நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ
அன்றிவ் வுலகத்து ளாருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளொன்றோ
நன்று வரங்கொடுத்த நாயகற்கு நன்றென்பார்.

இதுகேட்ட சிலர் சிந்தனையில், வரமளித்துக் காத்த அவ் வாய்மையறத்தின் கொடுமை புகுந்துறுத்தவே,

என்னே நிருபன் இயற்கை இருந்தவா
தன்னேர் இலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தால் பிழையாதோ மெய்யென்பார்.

பரிவுடைய நகரமாந்தர் தம்வாயில் இக்கேள்வி விளைவதற் குரியதே. முதலிலே இராமனுக்குக் கொடுத்தாகி விட்டபடியால் பிறகு பரதனுக்கு எடுத்துக் கொடுக்க அரசொன்றும் தயரதனுக்கில்லையே. ஒரு மெய் காக்க மற்றொரு மெய்யைப் பொய்க்கவேண்டுமென்பதுஇன்றியமையாததாயிற்று எனின், இவ்விரண்டின் கைகேசிக்குக்கொடுத்த வரத்தைத்தான் மறுத்திருந்தாலாகாதோவென ஏங்குகின்றாரிவர் முன்னென்றும் பின்னென்றும் வழக்குரைத்து இகழ்ந்தவர்இங்கு அங்கீணகர மக்களே. இது சட்டவாதம். இதுவும் இதுபோன்று, எழுத்தையும் சொல்லையும் பற்றிக் கொண்டு வாதிப்பது நீதியன்று; யாருக்கும் பெருமையன்று. மாத மூன்றில் கொடுத்த கடனைத் திருப்பாவிடின், கடன்காரன் தன் தசையிலொரு கூறு தருதல் வேண்டுமெனுந் தண்டமுறியிலேயே தலைநின்ற யூதன் ஷைலாக்கைக் குமைப்பதற்கே, "இரத்தம் ஒருதுளி சிந்துதற்கும் உன் முறியின்படி அதிகாரமில்லை—ஆதலின் தசைமட்டும் அறுத்துக்கொள்வதாயின் கொள்க'' என்னும் எழுத்துவாதம் செய்வது நேரிதாகும். ஆதலின், ஆண் ஷைலாக் அவனாயின் பெண் ஷைலாக் இவளென்றுநின்ற கைகேசியினிடத்தும் இத்தகைய வாதம் இரண்டோர்முறை வசிட்டனுடன் தயரதனும், வான்மீகத்தில், செலுத்தவேண்டி நேர்ந்தது. அங்கு, எல்லாச் செல்வத்தோடும் எல்லாச் சனங்களோடும் இராமனைக் காட்டிற்கனுப்பத் தலைப்பட்ட தயரதனை நோக்கி, "சாதுவே, மனிதரற்றதும், வேண்டிய சகல போகங்களும் நீங்கியதும், பார்க்க வழங்காத ஸாரமற்ற மதுவைப்போன்றதுமான இர்ாச்சியத்தைப் பரதன் அடையவேமாட்டான்'' ஆதலால் இராமனை ஏழையாய்த் துரத்தலே வேண்டுமெனக் கைகேசி வற்புறுத்தியபோது அம்மன்னன், "அநியாயக்காரி, உனக்கு வரத்தை கொடுத்தமை என்ற சுமையைச் சுமந்துகொண்டிருக்கும் என்னை ஏன் வருத்துகின்றாய்? நீ, முதலில் வரங் கேட்கும்போது, "'ஒருவரும் இராமனுடன் போகக் கூடாது' என்று கேட்டுக்கொள்ளவில்லையே'' என்று சாற்றினான். நாயகனுடன் அடவியேக மரவுரி அணிந்தவளாய்ச் சீதை வந்து நிற்றலும், திருமகளுக்குற்ற இவ்வெளிமையைக் காணலாற்றா வசிட்டமாமுனிவன், " கைகேயி, நீ கேட்டுக்கொண்டது இராமர் வனவாசம் பண்ணவேண்டு மென்றன்றோ ......இராஜகுமாரியான இவள், அழகான வாகனங்களையும் பரிசாரகர்களையும் அழைத்துக்கொண்டு, விவித வஸ்திரங்களோடும் காட்டுக்குப் போகட்டும்.......நீ வரங் கேட்கும்பொழுது சீதைக்கு ஒன்றுங் கூடாதென்னுமிதைக் கேட்கவில்லையே'' என்று வாதித்தார். இதனை மேற்கொண்டு தயரதனும், "ஜானகியானவள் மரவுரியைக் களையட்டும். இதைப்பற்றி நான் முன்பு வரங் கொடுக்கவில்லையே'' என்று கழறினான். எனினும் இவ்வாதமொன்றும் கைகேசியின் திறத்தில் சென்றதில்லை.

இரண்டு ஸம்ஸ்கிருத மஹா காவியங்களின் மொழிபெயர்ப்பு.

காதம்பரி

1400-வருஷங்களுக்கு முன் பட்டபாணன் இயற்றிய ஸம்ஸ்கிருத கதையின் தமிழ் மொழிபெயர்ப்பு. கதை வெகு அற்புதம். வர்ணனைகள் வெகு சுவை பொருந்தியன. "காதம்பரியைப் படிக்கையில் இரவிகர் உணவையும் விரும்பார்'' என்பது வித்வான்களின் பழமொழி. தமிழ் வசன நடை மிக்க இனிது. அநேகம் வித்வான்களும் ஸ்திரிகளும் கொண்டாடுகிறார்கள். விலை ரூ. 1-8.

மேகஸந்தேசம்

ஸ்ரீ காளிதாஸ மஹாகவியின் ஸம்ஸ்கிருத காவியத்தின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஒவ்வொரு பத்தியமும் ஒரு பதம் விடாமல் அழகிய வசனநடையில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. சாபவசத்தால் தன் மனைவியைவிட்டுப் பிரிந்த ஒருயக்ஷன் மனைவிக்குத் தூது அனுப்பும் அருமையான விஷயம்—மனோஹரமானது. முகவுரை முதலியவை வெகு விசேஷமானவை. 0-14-0.

இவ்விரண்டு புஸ்தகங்களும் ஒரே தடவையில் வாங்கினால் விலை ரூபா **2.** தபால் சார்ஜு பிரத்யேகம்.

வைத்திய கலாநிதி ஆபீஸ், 85, வெள்ளாழத் தெரு, வேப்பேரி, மதராஸ்.

பண்டாரம் மாந்த எண்ணெ

சாதாரணமாய்க் குழந்தைகளுக்கு உண்டாகும் மலச்சிக்கல், மாந்தம், இழுப்பு, ஜுரக் கட்டி, முதலியவைகளை ஆரம்பத்திலேயே வரவொட்டாமல் தடுத்துக் குழந்தைகளை நன்றாய்க் காப்பாற்றும் சஞ்சீவி எண்ணெ.

விலை அணு **12.** எங்கும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.

எம். சி. என்ஸ். எக்லெக்டிக் பார்மசி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

1931-வது வருஷத்திய வால்யூம் 4. அட்டவணை

(ஜனவரி முதல்—ஜூன் வரையில்)

தலையங்கம்.

இதழ்			பக்கம்.
1	புரிமுகம் ...	...	1
2	அகமே புறம் ...	...	21
3	வாழ்வாங்கு வாழ்பவர்,	1 ...	41
4	„ ... „	2 ...	61
5	„ ... „	3 ...	81
6	„ ... „	4 ...	101
7	„ ... „	5 ...	121
8	„ ... „	6 ...	141
9	„ ... „	7 ...	161
10	„ ... „	8 ...	181
11	„ ... „	9 ...	201
12	„ ... „	10 ...	221
13	உண்மையில் உழல்வார் திறம்.	1 ...	241
14	„ ... „	2 ...	261
15	„ ... „	3 ...	281
16	„ ... „	4 ...	301
17	„ ... „	5	321
18	எமது நண்பர்களுக்கோர் வேண்டுகோள்.		341
19	இருமன முடையோர்க் கொருசொல் ...		361
20	மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ		381
21	„ ... „	2 ...	401
22	„ ... „	3 ...	421
23	„ ... „	4 ...	441
24	உருவத்திரை ... „	1 ...	461
25	„ ... „	2 ...	481

——

கம்பராமாயணம்—அயோத்தியாகாண்டம்.

கைகேசி சூழ்வினைப் படலம்.

1	புனைவதுங் கலைப்பதும் புலவருக் கருமையோ	12
3	கண்ணிரண்டு மொன்றையே காணல் வேண்டுமோ	53
4	மன்னவன் மாண்டதெல்லாம் மீண்டிடான் மைந்த னென்றோ ...	71
5	மடவாரைக் கொடியோரென் றுரைக்கப் பற்றுமோ	93
6	பேயும்கனி யீயும்மொரு பெருந்தகை யாமோ	112
8	அன்னையென்றதும் மைந்தனென்றதும் துன்னித்துயின்றதில் தக்கவாயவே ...	150
9	அவல மகன்றிட வாற்றிய காட்சிகள் ...	172
10	வேற்றுமை வெளியே நிற்க விபரிதம் யாது மின்றே. ...	193
11	ஊகமெனி லொன்றிக் காட்சியெனின் மாறல்	215
12	இருபெருங் கவிவரரொருங்குற அறைந்தனர்	233
13	தீர்த்தனென் றோர்ந்தார் செயல்.	255
14	வஞ்சனையின் வாய்ப்பட்டு வீயாரோ வீரர்கள்	273
15	அவலச் சுவைக்கு மவதியுளது ...	292
16	மீதுரை போதிய வல்லியல் நாடகம் ...	312

நகர்நீங்கு படலம்.

17	அன்னைக்கே யமையா தென்னின் மனைவியின் மகிமை யென்னும். ...	333

இதழ்		பக்கம்.
18	மன்னவ னாணையை மறுக்காக் கற்பினள் ...	346
19	உண்மையில் உழல்வதெல்லாம் மெய்ம்மையை மறுப்பதாமோ. ...	371
20	ஏசாப் பெருமை கோசலை யிவளே. ...	395
21	கடவுட் காட்சி கம்பர்க் குளது ...	415
22	மூலமே மறந்த தென்றால் முனிவனுக் கிழுக்குண் டாமோ. ...	434
23	தயரதன் மதியுடன் மயங்கினர் புலவர் ...	451
24	காலத்தாற் றோர்ந்த கலை ...	474
25	வாது செய்தவர் வளநகர் மக்களே ...	495

——

அப்பர்.

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

வைத்தியம் ...	3, 23, 43, 63.
ஜலஸ்தம்பனம்	83
அக்னிஸ்தம்பனம் ...	103, 126
வாயுஸ்தம்பனம்	145
கட்கஸ்தம்பனம் ...	170
வாக்குஸ்தம்பனம் ...	190
திருஷ்டிஸ்தம்பனம் ...	211
யோகம்:— ...	226, 243, 263, 282
ராஜயோகம்	303, 323, 351, 363, 383
ஹடயோகம் ...	403, 423, 443, 463, 483

——

சூளாமணி.

1.	நாட்டுச் சருக்கம் :—	6, 25, 45
2.	நகரச் சருக்கம் :—	66, 88, 105, 125
3.	குமாரகாலச் சருக்கம்:—	148, 166, 185, 209, 229, 249
4.	இரதநூபுரச் சருக்கம்:—	268, 288, 308, 327, 343, 365, 386, 407, 415, 445
5.	மந்திரசாலைச்சருக்கம்:—	468, 484

——

யாப்பிலக்கணம்.

1	முன்னுரை-அசை ...	8
2, 3, 5, 6, 7.	அசை	29, 47, 86, 107, 123
7, 8, 9	சீர்	123, 152, 168
9	தளை	168
10	ஆசிரியத்தளை	188
11	வெண்டளை	206
12	கலித்தளை	231
13	வஞ்சித்தளை	251
14, 15	அடி	271, 290
16, 17, 18	தொடை:—மோனை	310, 330, 355
19	„ :—எதுகை ...	374
20	„ :—எதுகை, மோனை ...	389
21	„ :—முரண்	411
23	„ :—இயைபு ...	453
24	„ :—அளபெடை இரட்டை அந்தாதி, செந்தொடை...	472
25	தொடை விகற்பங்கள்.	488

——

மானத சாத்திரம்,

இதழ்.			பக்கம்
1, 2, 3	.... உணர்வு.	....	9, 32, 50
4, 5, 6	.... புலன்கள்:—	...	69, 85, 110
7, 8	... „	செவி....	130, 154
9, 10	... „	நிலைப்புலன்	172, 192
11		மூக்கு, வாய்	213
13	உணர்வு	...	245
21, 22		காலவுணர்வு	409, 428
24, 25		இடவுணர்வு	476, 490

———

மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்.

7 உலகுக்கு வேண்டாதார் யாவர்—Addison 130
21 விளக்குமாறு விளக்கும் ஆறு—Swift 414
23 விசிறி—Joseph Addison 455
25 ஓர் இரவு வர்ணனை—Goldsmith 493

———

பிஸாரோ நாடகம்.

7	முன்முகம்			...	... 133
8, 9, 10	அங்கம். 1.	களம்	1.		143, 163, 183
11	„ 2	„	1, 2	...	203
12	„	„	3, 4	...	223
13	„ 3	„	1, 2	...	247
14	„ 3	„	3	...	265
15	„ 3		3	...	285
16, 17	„ 4	„	1		306, 325
18	„ 4	„	2	...	349
19	„ 5	„	1, 2	...	368
20	„ 5	„	3, 4	...	388

———

நவராத்திரி—ஓர் நாடகம்.

இதழ்	பக்கம்.
21, 22, 23, 24, 26 ...	404, 430, 448, 465, 486

———

தனிப்பாடல்கள்.

1 நாமகள், முருகன்—நாவாலி கா. சோம சுந்தரம்பிள்ளை 1
2, 3 நாமகள் „ „ ... 34, 53
5 முருகன், நாமகள் „ „ ... 91
10 நாமகள் குயிற்பத்து „ ... 187
13 நாமகள் அம்மானை „ ... 253
15 கந்தவேள் „ ... 287
17 நூறுண்டு வாழ்தல் „ ... 335
24 கலைமகளந்தாதி—கி. வெங்கடசாமி ரெட்டியார் „ ... 471

———

பிறவிடயங்கள்.

1 பெரியபுராண நுட்பம்—கதிரேசன் செட்டியார் 14
ஞான மொழிகள்—க. வேலுப்பிள்ளை ... 15
3 ஞான மொழிகள்— 52
14 ஞானமொழிகள்— 273
15 அண்டபுராணம் —(தமிழ்வளர்ப்போர் திறமுரைத்தபடலம்)—கிருஷ்ணகாந்த முதலியார் 295
16, 17 „ „ ... 304, 335
மதிப்புரை—இராமநாத மான்மியம் நவரஸகீத மஞ்சரி 314
19 சிறுகதை :—வண்மையின் வரம்பு. சுந்தரலிங்கம் 376
20 மஹாமஹோபாத்தியாய சாமிநாத ஐயர்—கோதண்டராம ஐயர் 393
23 மதிப்புரை—திருவருட்பா ... 459

———

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலே,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
திரிபலா தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா.
NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD
மதுரை காஞ்சீபுரம்.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்ருகச் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி லிமிடெட்,

சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரை அடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

National Insurance Co. Ltd.

HEAD OFFICE:—National Insurance Building.
7, Council House Street, Calcutta.
(The Leading Company managed by Indians)
Estd: 1906.

Summary of Annual Report 1930.

New Business Completed in 1930	Rs.	1,13,55,069.
Increase of LifeAssurance Fund1930	,,	11,51,813.
Premium Income	,,	30,83,936.
Interest Income earned in 1930	,,	7,47,608.
Expenses of Management	,,	27.6%
Total Assets exceed	,,	1,65,00,000.
Total Life Assurance in force 1930	,,	6,55,70,916.

Low rates of premium, liberal policy conditions.
All forms of Life Assurance business transacted.
IT WILL PAY YOU TO APPLY FOR AGENCY TERMS.

T. ANANTACHARI, B.A.,
Secretary,
Madras Branch
113, Armenian Street, Madras.

R. G. DAS & Co.,
Managers.

NATIONAL FIRE & GENERAL INSURANCE CO. LTD.,
HEAD OFFICE:—National Insurance Building,
7, Council House Street, Calcutta.

FIRE
MOTOR CAR, MOTOR CYCLE } INSURANCES.

Particulars of any of the above will be sent on request.

R. G. DAS & Co.,
Managers.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்ருவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ,, ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

குறைந்த விலை! நிறைந்த விஷயம்!
சிறந்த கதை! உயர்ந்த பதிப்பு!

பாவலர், நாவலர், மற்றி யாவரும் விரும்பும் பாச்சுவை ததும்பப் புதுமை பெற்றிலங்கும்

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கலியம்

இனிமை செறிந்த தமிழ் நாவல்

ஸ்ரீமான். மாந்தை. சா. கிருஷ்ணய்யர் எழுதியது.

விலை ரூபா ஒன்றே

ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ்,
மைலாப்பூர், மதறாஸ்.

... HA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS 41

KALANILAYAM.
REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் ::
மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுசகளாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர், ம. ஸ்ரீனிவாஸாசாரியார், 218 தங்கசாலை வீதி, மதராஸ்.

—:வைத்திய ரத்ன:—
பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்
ESTD 1898
"ஜீவாமிருதம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.
எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0
ஆயுர்வேதாஸ்ரமம்
தபாற் பெட்டி. 287. மதராஸ்.
கேட்லாக் இனம்.

அகராதிகள்.
தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0
காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0
கலா நிலயம், புரசைவாக்கம், சென்னை.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்
தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும். தேவையான புஸ்தகங்களுக் கெழுதவும்.
கே. எஸ். மணியம் அண்டு கோ.,
புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்
:: மகா பாரதம் தமிழ் வசனம் ::
திருத்தமான உயர்ந்த பதிப்பு
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.
(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

ஆயுர்வேத ரத்ன பண்டிட்
டாக்டர் N. V. ஸ்ரீராமாசார்லு
அவர்களின்
ஸித்தகல்ப மகரத்துஜம்
(ரிஜிஸ்டர்ட்)
தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபகசக்தி பெருகவைக்கவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.
60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா 10
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட், சென்னை.
மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L.
தபால் பெட்டி 151, சென்னை.
தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை
ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.
கேட்லாக் இனம்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0. கலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் எண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. வயாங்கநாத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A.B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலாநிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)